Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை (05.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 189

# தொண்டர் நிறுவனங்களின் பணிகள் மட்டக்களப்பில் முடங்கும் அபாயம்!

## செஞ்சிலுவைப் பணியாளர்கள் இருவரின் படுகொலைகளால் ஏனையோர் மத்தியில் அச்சம்

மட்டக்களப்பு,ஜூன்5

போரினாலும், ஆழிப்பேரலையினாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டு மனிதாபிமானப் பணிகள் பெரும் அளவில் தேவைப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில் -

தொண்டர் நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முடங்கிப்போகும் அபாய நிலை தோன்றியுள்ளது.

மட்டக்களப்புச் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் இருவர் கொழும்பில் கடத்தப்பட்டுப் படு கொலை செய்யப்பட்ட சம்பவத்தினால் -

வெளிநாட்டு, உள்நாட்டுத் தொண்டர் நிறுவனங்களில் பணியாற்றுவோர் மத்தியில் பெரும் அச்ச நிலை தோன்றியுள்ளது.

அரசசார்பற்ற மற்றும் தொண்டர் நிறுவனங்களில் பணியாற்றுவது உயிராபத்து விளைவிக்கக் கூடியதாக ஆகியிருப்பது அந்த நிறுவனங்கள் இப்போது மேற்கொண்டுவரும் மனிதாபிமானப் பணிகளை பெரிதும் முடக்கும் என்று அவற்றின் அமைப்பாளர்கள் மற்றும் இணைப்பாளர்கள் கவலை தெரிவித்தனர்.

வெளிநாட்டு (பிரான்ஸின்) தொண்டர் நிறுவனத்தின் (அக்ஸன் பெயிம்) தொண்டர்கள் 17 பேரின் படுகொலைகள் கிழக்கில் ஏற்கனவே தொண்டர் நிறுவனங்களின் பணிகளைப் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்துக்கு வெடி குண்டு மிரட்டல்

கொழும்பு,ஜூன்5

நாடாளுமன்றத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கப்போவதாகக் கடந்த மாதம் 29ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்பு மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக நாடாளுமன்ற அதிகாரிகளினால் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்துத் தாங்கள் விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவித்து, அது பற்றிய விசேட அறிக்கை ஒன்றை வெலிக்கடை பொலிஸார் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். (சி)

## வவுனியாவில் விமானக் குண்டுவீச்சு

கொழும்பு,ஜூன்5

வவுனியா பாலம்பிட்டி பகுதியில் உள்ள புலிகளின் மோட்டார் நிலை மீது விமானப்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 9. 15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் புலிகளின் மோட்டார் நிலை முற்றாக சேதமடைந்தது என நம்பப்படுவதாக அந் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்களின் பாதுகாப்பு, சுதந்திர நடமாட்டத்தை உறுதிப்படுத்தவேண்டும்

### சகல தரப்புகளிடமும் கோருகிறது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு

கொழும்பு,ஜூன்5

பொது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும் பாதுகாப்பையும் மோதல்களில் சம்பந்தப்பட்ட தரப்புகள் உறுதிசெய்யவேண்டும்.

இப்படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு செஞ்சிலுவைச் சங்கத்தின் இரு பணியாளர்கள் கடத்திக் கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கொலைகள் இடம்பெறுவதை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் அனுமதிக்கவில்லை. தொண்டு அமைப்புக்களின் மனிதாபிமானப் பணிகளை மதிக்கவேண்டும்.

மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடுவோருக்கும் அவர்களின் செயற்பாடுகளுக்கும் பங்கம் விளைவிக்கும் எந்தச் செயல்களிலும் ஈடுபடலாகாது.

இவர்கள் மனிதாபிமானப் பணிகளையே மேற்கொள்கிறார்கள். அவர்கள் மோதல்களில் பங்குகொள்வதில்லை. அவர்கள் மோதல்களில் சிக்காமல் சுதந்திரமாக நடமாடுவதையும் அவர்களது பாதுகாப்பையும் மோதலில் ஈடுபடுபவர்கள் உறுதி செய்யவேண்டும் - என்றுள்ளது. (அ-1)

## பம்பைமடுச் சமரில் உயிரிழந்த 15 சிப்பாய்களின் சடலங்கள் கிளிநொச்சியில் இன்று செஞ்சிலுவை அதிகாரிகளிடம் கையளிப்பு

கொழும்பு,ஜூன் 05

வவுனியா - மன்னார் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளுக்குள் ஊடுருவி தாங்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த அரசுப் படையினர் 15 பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள்இன்று கிளிநொச்சியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிப்பர்.

கடும் சண்டை நடைபெற்ற பகுதிகளில் இருந்து நேற்றுப் பகல் மீட்கப்பட்ட இந்தச் சடலங்கள் நேற்றுப் பிற்பகலில் கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டன என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்திருக்கிறார்.

வவுனியா - மன்னார் எல்லைப்புறத்தில் முள்ளிக்குளம், விளாத்திக்குளம், பரசங்குளம் பகுதிகளில் அண்மையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்நகர்ந்த அரசுப்படைகள் அங்கு நிறுவியிருந்த நிலைகள் மீது புலிகள் சனிக்கிழமை இரவு பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர். இந்தப் பகுதிகளில் பலமணி நேரம் தொடர்ச்சியாக இடம்பெற்ற சமரில் இரண்டு தரப்புகளிலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டன என்று தகவல்கள் வெளியாகின.

முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளுக்குள் முன்னேறி தாக்குதல் நடத்திய அதே வேளை, பம்பைமடுவில் உள்ள இராணுவத்தின் நீண்ட தூர வீச்சு கொண்ட ஆட்லறி

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் நேற்று நண்பகல் நல்லூரில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஜூன் 5

நல்லூர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இளைஞர்கள் மூவர் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நல்லூர் கோவில் வீதியில் - அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அலுவலகத்துக்குச் சமீபமாக - வீதியில் மூவரும் ஒரே மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை அவர்கள் சுடப்பட்டனர்.

இவர்கள் சுடப்பட்ட சிறிது நேரத்தில் நேற்றுப் பிற்பகல் சுமார் 2 மணியளவில் அந்த வீதியில் பொலிஸார் போக்குவரத்தைத் தடைசெய்து விசாரணையை நடத்தினர். மூவரது சடலங்களும் அவர்களது மோட்டார் சைக்கிளுடன் நடு வீதியில் கிடந்தன.

நேற்று மாலை யாழ். நீதிவான் இ. த. விக்னராஜா அந்த இடத்துக்குச் சென்று

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதே இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் கொலை

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

கொழும்பு,ஜூன் 5

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அரசுக்கும் வெளிநாடுகளில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

- இவ்வாறு குற்றம் சாட்டி அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டிருக்கிறது ஜனாதிபதி செயலகம்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு செஞ்சிலுவைச்சங்கப் பணியாளர்கள் இருவர் கொல்லப்பட்ட சம்பவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது அரசுக்கும், ஒட்டுமொத்தத்தில் இலங்கைக்கும் மனித உரிமைகள் தொடர்பில் வெளிநாடுகளில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்தும், ஆழிப்பேரலைக்குப் பின்னரான கட்டுமானப் பணிகள் குறித்தும் ஐரோப்பிய நாடாளுமன்றம் பிரஸெல்ஸில் கூட விருக்கின்ற நேரம் பார்த்தும் -

(08ஆம் பக்கம் பார்க்க)



கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பணியாளர்களின் பூதவுடல்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அஞ்சலி செலுத்தியபோது...

## செஞ்சிலுவைப் பணியாளரின் சடலங்களை இன்று மட்டு. நகர் எடுத்துச் செல்ல ஏற்பாடு

கொழும்பு,ஜூன் 5

கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்டு - படுகெலை செய்யப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களின் பூதவுடல்களை இன்று அதிகாலை 5 மணிக்கு மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்ல கொழும்பிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை மட்டக்களப்பில் நடைபெறும்.

இரத்தினபுரி - வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இவர்களின் சடலங்கள், நேற்று ப் பிற்பகல் 1.30 மணியளவில் கொழும்புக்கு எடுத்துவரப்பட்டு, கொழும்பு கனத்தையிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. கொழும்பு மாவட்ட செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் பணியாளர்களின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இருவரது சடலங்களும் இன்று அதிகாலை 5 மணியளவில் மட்டக்களப்பு நகருக்கு எடுத்துச் செல்லப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ். பல்கலையில் நேற்று அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன் 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த கல்விசாரா ஊழியர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் வெளியிட்ட சுற்று நிருபத்தை மீளப்பெறக் கோரி நேற்று முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். எனினும் இன்றுமுதல் அவர்கள் தமது வழமையான கடமைகளை மேற்கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் -

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் னர் ஏனைய பல்கலைக்கழகங்களின் போராட்டம் முடிவுக்குவராத நிலையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் 11ஆம் திகதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர் என அறியப்படுகிறது.

(அ-1-68)


## புதிய குருமுதல்வரை வாழ்த்துகின்றோம்

அருட்கலாநிதி
ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்



யாழ். மறைமாவட்டத்தின்
புதிய 'குரு முதல்வராக' பணியேற்றமையை
இட்டு பெருமகிழ்வடைவதோடு இப்பணி
சிறக்க எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

(61323)

பாடசாலைச் சமூகம்,
யா/ மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை, இளவாலை.


## இதய அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும்,
அதிபருமாகிய

**ச. சேனாதிராசா அவர்கள்**

திடீர் இறைபதம் எய்தியமை எம்மையெல்லாம்
அதிர்ச்சிக்குள்ளாக்கி ஆழ்ந்த கவலையை
ஏற்படுத்தியுள்ளது.
கல்லூரியில் கடமையாற்றும் காலத்தில்
மாணவர்களின் கல்வி விருத்திக்கும், கல்லூரியின் மேம்பாட்டிற்கும்
அயராது பாடுபட்டவர்.
அன்னாரின் கள்ளங்கபடமற்ற புனித ஆன்மா எல்லாம் வல்ல
இறைவனின் பாதார விந்தங்களை அடைய பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*யா/ யாழ்ற்ரன் கல்லூரி,* அதிபர், ஆசிரியர்கள்,
*காரைநகர்.* (61332) ஊழியர்கள், மாணவர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19 | 18 |
| ★ | ★ |
| 11 | 05 |
| ★ | ★ |
| 1920 | 2006 |



**திருமதி நடராசா ஏகாம்பிகை**

**திதி - 05.06.2007**

எமது அம்மா எங்களை விட்டகன்று
ஓராண்டு உருண்டோடி விட்டது
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
எங்கள் நெஞ்சங்களை விட்டகல மாட்டீர்கள்

பாசத்துடன்
*184 A, நாவலர் வீதி,* மக்கள், மருமக்கள்,
*யாழ்ப்பாணம்.* (61328) பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**சிவனடியான் கமலாதேவி**

மலர்வு
26.04.1938

உதிர்வு
06.05.2007

இன்று (05.06.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும்வீட்டுக்கிருத்தியம்ஆகியவற்றிலும்அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*முத்தட்டு மட வீதி,*
*கோண்டாவில் மேற்கு,* வே. அமிர்தலிங்கம் (சகோதரன்)
*கோண்டாவில்.* (61321) மருமக்கள்.

# நெடுந்தீவில் கடல் உணவுகளுக்கு பெரும் தட்டுப்பாடு

நல்லூர்,ஜூன் 5

நெடுந்தீவில் கடல் உணவு வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விற்பனைக்காக இங்கிருந்து தினமும் யாழ்.நகருக்கு மீன்களைக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளும் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்தன.

கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற சமரைத் தொடர்ந்து படையினரால் கடற்றொழில் செய்வதற்கான அனுமதி நிறுத்தப்பட்டிருந்தது.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படாததனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது. (அ-111)

# சுகாதாரப் பணிமனைக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நாளை புதன்கிழமை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற இருந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இக்கூட்டம் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன் 5

கொட்டடி வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (1)

* * *

வடமராட்சி,ஜூன் 5

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்களல் விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (203-160)

* * *

சுழிபுரம்,ஜூன் 5

சுழிபுரம் குடியிருப்பு ஓடையம்பதி சிவன் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து விசேட பூசையும் சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (203-28)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 5

வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார் ஆலய சங்காபிசேகம் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 9 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல், சுவாமி வீதியுலாவருதல் என்பன இடம்பெறும். (203)

* * *

வடமராட்சி,ஜூன் 5

பருத்தித்துறை மாதனை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

(203-1[illegible])

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 5

கச்சாய் தெற்கு பாதாள வைரவர் ஆலய அலங்காரஉற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் (1-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 5

சாவகச்சேரி பெரியமாவடி, கந்தசாமி தேவஸ்தான பெருந்திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1-207)


## விற்பனைக்கு

1)40W சோலர்
2)10 H.P, 15 H.P, 20 H.P, 25 H.P மோட்டர்கள் (3 PHASE)

தொடர்பு: க. சுப்பிரமணியம், கல்வயல், சாவகச்சேரி.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்




# பனங்கள் உற்பத்தி இந்த வருடம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

பனங்கள் உற்பத்தி கடந்தகாலங்களைவிட இம்முறை குடா நாட்டில் அதிகரித்துள்ளதாக பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தவருடம் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் குடாநாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதால் பலரும் தொழில் வாய்ப்புக்களை இழந்தமை தெரிந்ததே.

சீவல் தொழில் தெரிந்தும் அதனைச் செய்யாத பலரும் தொழில் வாய்ப்பைக் கருத்தில் கொண்டு கள் பெறும் தொழிலில் ஈடு பட்டுள்ளதாலேயே பனங்கள் ளின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

உற்பத்தி செய்யப்படும் பனங்கள் கூட்டுறவுச் சங்க தவறணைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. எஞ்சியவை திக்கம், சங்கானை, வரணி பனஞ்சாராயத் தொழிற்சாலைகளுக்கும் போத்தல் கள் அடைக்கும் தொழிற்சாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை கூட்டுறவுச் சங்கத் தவறணைகளில் ஒரு போத்தல் கள் 30 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (அ-160)

# யாழ். பல்கலையில் இன்று கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு "உடுக்களின் பரிணாமம்'' கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். பல்லைக்கழகப் பட்டப் பின்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசியர் கே. கந்தசாமி கருத்துரை வழங்குவார். (1-203)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் சாந்திபன்

**(உப தபாலதிபர், மிருசுவில்)**



மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் சரசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சாந்தீபன் 03.06.2007 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் நிலோஜினியின் அன்புக் கணவரும் நிஷானி, கேசினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரலிங்கம் - செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும் றஞ்சினி, லோஜினி (லண்டன்), ஜானகி (ஆசிரியை, உசன் இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுப்பிரமணியம், அருளானந்தம் (லண்டன்), ஆனந்தகிருபன் ஆகியோரின் மைத்துனரும் கபில்ராஜ் (லண்டன்), சரண்யா ஆகியோரின் அன்பு அத்தானும் சோபிதா, ஆருரன், குபேரன், மயூரன், கௌசிகா, லக்சிகா, மதுசன், யதுசன் (லண்டன்), சிஜானன், கஜானன், நிஜானன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை வடக்கு,* **தகவல்:**
*சரசாலை.* (61325) **சு. சுந்தரலிங்கம் (மாமன்).**

### வயித்திலிங்கம் செல்லத்துரை



மாசிவன் சந்தி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் செல்லத்துரை நேற்று (04.06.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற ஐயாத்துரை, செல்லம் ஆகியோரின் சகோதரனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரியின் பாசமிகு தந்தையும் இரத்தினசிங்கத்தின் (T.O., R.D.A.) மாமனும் நிஷாந்தி, ஜெயவதனி, பிரேமகுமார் (R.D.A.), மனோகரன், சாந்தகுமார் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*நீர்வேலி வடக்கு,* **ந. இரத்தினசிங்கம் (மருமகன் -**
*நீர்வேலி.* (61324) ***0779821709).***

### காராளபிள்ளை துரைசிங்கம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் **Water Works** திணைக்களத்திலும் நைஜீரியாவிலும் பணிபுரிந்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான கா. துரைசிங்கம் 01.06.2007 வெள்ளிக்கிழமை கனடாவில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காராளபிள்ளை - தவபாக்கியம் தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற திரு. திருமதி சிதம்பரநாதனின் பெறாமகனும் காலஞ்சென்ற பொன்னையா (ஆசிரியர், மா/ மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் வரதராஜன் (U.S.A.), பிறேமராஜன் (U.S.A.), விமலராஜன் (கனடா), ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (U.S.A.), சுகந்தி (U.S.A.), தயாநிதி (கனடா), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ராஜேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்றவர்களான சுந்தரநடேசன், வைத்தியநாதன், முருகேசபிள்ளை, பரமேஸ்வரி (கொழும்பு), கதிர்காமநாதன் (U.S.A.) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான காராளசிங்கம் (சட்டத்தரணி), மகேஸ்வரன் (கணக்காளர்), ஸ்ரீ பார்வதிதேவி (U.S.A.), மகாமாயதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கமலாகரன் (சுங்கத் திணைக்களம்), செல்வராஜா (கணக்காளர் - கனடா) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.06.2007) திங்கட்கிழமை நண்பகல் கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*15, ஜானகி லேன், பம்பலப்பிட்டி.* திருமதி ராஜேஸ்வரி
*தொ.பே. 2583499.* (அ-52554) **காராளசிங்கம் (சகோதரி).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து நிறுவனங்களுக்கு நிதி உதவி

நல்லூர்,ஜூன் 5

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள அற நெறிப் பாடசாலைகள், இந்து ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்கள் உட்பட 52 அமைப்புகளுக்கு நிதி உதவிகள் வழங் கப்பட்டுள்ளன.

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த நிதி வழங்கும் நிகழ்வில் திணைக்களத்தின் கணக் காளர் எஸ்.காண்டீபன் மேற்படி நிறுவனங் களின் பொறுப்பாளர்களிடம் ஒதுக்கப்பட்ட நிதிக்கான காசோலைகளை வழங்கினார்.

55 லட்சம் ரூபா வரை நிதி உதவி வழங் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-111)

## உலக வங்கியின் வீடமைப்புத் திட்டம்; வன்னிப் பிரதேசத்தில் இடைநிறுத்தம்

கிளிநொச்சி,ஜூன் 5

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த வீடமைப்புத் திட் டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இராணு வக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இவ் வாண்டு ஆயிரத்து 500 வீடுகளை அமைக்க உலக வங்கி உத்தேசித்திருந்தது.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டக் கொடுப் பனவுகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட் டிருந்தன.

கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதிக்குப் பின் ஏ-9 பாதை மூடப்பட்டதால் அந்தப் பகுதிகளுக்கு கட்டடப் பொருள்கள் எடுத்துச்செல்ல அனு மதி மறுக்கப்பட்டது.

இதன் காரணமாக உலக வங்கியின் வீட மைப்புத் திட்டம் பாதிக்கப்பட்டிருந்தது.

கடந்த வாரம் கூடிய உலக வங்கியின் அதிகாரிகள், கள நிலைமை குறித்து விரி வாக ஆராய்ந்தனர்.

இந்தப் பிரதேசங்களுக்கான வீடமைக் கும் திட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத் துவது என்றும் -

சுமுக நிலை திரும்பிய பின் அத்திட் டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்வது என்றும் - அங்கு முடிவு செய் யப்பட்டுள்ளது. (1)

## மீட்கப்படாத அடகு நகைகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம், ஜூன் 5

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பா ணம், பருத்தித்துறை, சுன்னாகம், சாவகச் சேரி, மானிப்பாய், திருநெல்வேலி ஆகிய கிளைகளில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப் படாத அடகுப் பொருள்கள் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த ஏல விற்பனை இம்மாதம் 30ஆம் திகதியும், ஜூலை மாதம் முதலாம் திகதியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்.கிளை யில் காலை 9 மணிக்கு நடைபெறும் என அறி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்து றைக் கிளையில் மேற்படி காலப்பகுதியில் தங்கள் நகைகளை அடகு வைத்தவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை மீட்டுக் கொள்ளுமாறு முகாமையாளர் அறி வித்துள்ளார். (50)

## புற்றுநோய் பற்றிய கண்காட்சி நேற்று முதல் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஜூன் 5

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணை யுடன் யாழ்.புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவு மற்றும் யாழ்.மருத்துவபீடம் ஆகியன இணைந்து நடத்தும் கண்காட்சியூடான புற்று நோய் விழிப்புணர்வு நிகழ்வு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக் கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகப் பதில் துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.குமாரவடிவேல் குத்துவிளக்கை ஏற்றிக் கண்காட்சியை ஆரம் பித்து வைத்தார்.

டாக்டர் எஸ்.ஜெயக்குமார் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஞானசோதி, விசேட வைத்திய நிபுணர் டாக் டர் எஸ்.பேரானந்தராஜா ஆகியோர் உட்பட வைத்திய நிபுணர்கள், மருத்துவ பீட மாண வர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர்.

நேற்றுக் காலை முதல் பல்வேறு இடங் களில் இருந்தும் வருகைதந்த பெருமள வான பாடசாலை மாணவர்களும் பொதுமக் களும் கண்காட்சி யைப் பார்வையிட்டனர்.

புற்று நோய் தொடர்பான வீடியோப் படக் காட்சியும் அங்கு காண்பிக்கப்பட்டது. (50)



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமான புற்றுநோய்க் கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.குமாரவடிவேல் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் கண்காட்சியைப் பார்வையிடும் மாணவிகளையும் படங்களில் காணலாம்.

## வலி.தென்மேற்கில் காலம் கடந்த பதிவுகள்

வலி.தென்மேற்கு, ஜூன் 5

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிர தேச செயலர் பிரிவில் காலங்கடந்த இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவுகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

காலங்கடந்த பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள், கிராம சேவையாளர்கள் அல்லது பிரதேச செயலக மாவட்டப் பதி வாளருடன் நாளை புதன்கிழமைக்கு முன் னர் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (203-135)

## வடக்கின் கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க ஏற்பாடு

திருகோணமலை, ஜூன் 5

வடக்கு மகாண சபைக்குட்பட்ட பிரதே சத்தில் மிகக் கஷ்ட, கஷ்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பட்டதாரிகளை ஆசிரியர் களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கல்வியமைச் சுச் செயலாளர் எஸ்.இளங்கோவன் இத னைத் தெரிவித்தார்.

இந்தப் பதவிக்காக ஆயிரத்து 652 பட்ட தாரிகள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக் கான போட்டிப் பரீட்சை விரைவில் நடத்தப் படவுள்ளது.

அப்பரீட்சையின் அடிப்படையில் நிய மனங்கள் வழங்கப்படும்.

மிகக் கஷ்ட, கஷ்டப் பிரதேசப் பாடசாலை களில் பெரும் எண்ணிக்கையான வெற்றி டங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கா கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. - இப்படி அவர் தெரிவித்தார். (1)

## அத்துளு குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிக்குமாறு அரச அதிபர் பணிப்பு

கட்டைவேலி, ஜூன் 5

கரவெட்டி அத்துளு குளத்திலிருந்து குழாய் மூலம் நீர் விநியோகிக்கும் திட்டத்தை விஸ் தரிக்கும் ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளு மாறு தேசிய நீர் வழங்கல் சபையின் யாழ். பிராந்திய அதிகாரிகளுக்கு யாழ்.அரச அதி பர் பணிப்புரை விடுத்துள்ளார்.

நீர்வள பாதுகாப்பு சூழலியல் முகாமைத் துவக் கருத்திட்டத்தின் கீழ் மழை நீர் சேக ரிப்பு மாதிரிக் குளமாக அத்துளுக் குளம் மாற் றியமைக்கப்பட்டுள்ளது. இதற்கென இக் குளத்தின் புனரமைப்புப் பணி 'நோராட்' நிறு வனத்தின் அனுசரணையுடன் 20 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குளத்தின் புனரமைப்புப் பணிகளை அண்மையில் யாழ்.அரச அதிபர் நேரில் சென்று பார்வையிட்டார். அதன் போதே பிராந் திய அதிகாரிகளுக்கு அவர் இப் பணிப்பு ரையை விடுத்துள்ளார்.

இக் குளத்திலிருந்து பெறப்படும் நீர், குவைத் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப் பட்டு குழாய்கள் மூலம் விநியோகிக்கப் பட்டு வருகின்றது. இதனால் பல பிரதேச மக் கள் நன்மை அடைகின்றனர்.

மேலும் பலருக்கு இத் திட்டம் பயன ளிக்கும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் விநி யோகத்தை விஸ்தரிக்குமாறு அரச அதிபர் பணித்துள்ளார். (202-160)

## தென்மராட்சி வலயத்தில் கணித விநாடிவினாப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன் 5

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை களில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கிடையே கணித வினாடி வினாப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பாடசாலை ரீதியாக நடத்தப்படும் போட்டி களில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக் கிடையே வலயரீதியாகப் போட்டி நடத்தப் படும்.

வலய ரீதியான முதற்சுற்றுப் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதியும் இறுதிச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதியும் சாவ கச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வலய ரீதியில் வெற்றிபெறும் மாணவர் களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் எதிர் வரும் 26ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல் லூரியில் நடைபெறும். (202)

## யாழ்.நகரிலுள்ள நலன்புரி நிலையங்களில் 156 குடும்பங்கள் தொடர்ந்தும் தங்கியுள்ளன

குருநகர், ஜூன் 5

யாழ்.நகரப் பகுதியில் தற்போது 3 நலன் புரி நிலையங்களில் 156 குடும்பங்களைச் சேர்ந்த 564 பேர் தங்கியுள்ளனர்.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதி காரி அலுவலகப் புள்ளிவிவரங்களில் இருந்து இது தெரியவந்தது.

சென்.நீக்கலஸ் நலன்புரி நிலையத்தில் 73 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேரும், யாழ்.கதீஜா நலன்புரி நிலையத்தில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேரும், யாழ். அடைக்கல அன்னை நலன்புரி நிலையத்தில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 230 பேரும் தங் கியுள்ளனர்.

இவர்களில் 6 மாதத்திற்குட்பட்ட குழந் தைகள் 9 பேரும், 6 மாதம் தொடக்கம் ஒரு வயது வரையான குழுந்தைகள் 9 பேரும் ஒரு வயது தொடக்கம் 5 வயது வரையான சிறுவர்கள் 68 பேரும் உள்ளனர்.

கடந்த வருடம் ஜூலை மாதம் அல்லைப் பிட்டியில் இடம்பெற்ற அசம்பாவித சம்ப வங்களை அடுத்து இடம்பெயர்ந்த மக்களே இந்த நலன்புரி நிலையங்களில் வசிக்கின் றமை குறிப்பிடத்தக்கது. (202-51)

## அதிபர் சேவை தரம் 3 இற்கு விரைவில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன் 5

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடத்தப்படும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங் கோவன் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட வர்களின் பெயர் விவரம் அடுத்து வரும் வாரங் களில் அறிவிக்கப்படும் எனவும் மேலும் தெரி வித்தார்.

எதிர்வரும் 11ஆம் திகதி வடக்கு மாகா ணத்தின் சகல மாவட்டங்களிலும் இலங்கை அதிபர் சேவை தரம் - 2 இற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற உள்ளது தெரிந்ததே.

அப் பரீட்சை முடிவடைந்த பின்னரே தரம் -3 இற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## பிரபாகரனுக்கு ஆதரவானோரை பிஸ்ரலால் சுடுவாராம் மேர்வின்

கொழும்பு, ஜூன் 5

''கம்பஹா மாவட்டத்தில் பிரபாகரனுக்கு ஆதரவான எவரையும் சந்திக்க நேர்ந்தால் அவர்களை உடனடியாகவே என்னிடம் உள்ள பிஸ்ரலால் சுட்டுக் கொன்றுவிடுவேன். அதற்கு எனக்கு சட்டமும் தேவையில்லை. பொலி ஸும் தேவையில்லை''

இப்படிச் சூளுரைத்திருக்கிறார் அமைச் சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனித் தொகுதி அமைப்பாளருமான மேர்வின் சில்வா.

கிரிபத் கொடவில் நேற்றுமுன்தினம் சுதந் திரக்கட்சியின் ஏற்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று நடந் தது. அதில் கலந்து கொண்டு ஆவேசமாகப் பேசினார் மேர்வின்சில்வா.

''பிரபாகரனது ஆதரவாளர்களையும் அவர் களுக்கு உதவி புரிபவர்களையும் கொலை புரிந்து விட்டு என்றாவது ஒருநாள் மக்களுக் காக வீரமரணம் அடைய விரும்புகிறேன்.

''துட்டகைமுனு ரூவன் வெலிசாயவைப் பார்த்தவாறு உயிரிழந்ததைப்போல களனி விகாரையைப் பார்த்தவாறு நான் உயிரிழக்க விரும்புகிறேன். அவ்வாறு நான் உயிரிழந் தால் களனி கங்கை அருகில் என்னை எரித்து எனது சாம்பலை களனி ஆற்றில் கலக்கவிட் டால் அது எனக்கு மகிழ்ச்சிதரும்.'' - என்று மேல்வின் சில்வா மேலும் கூறினார். (சி)

## குடும்ப அட்டை விநியோகம்

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குடி யிருப்பாளர்களுக்கு புதிய குடும்ப விவர பங்கீட்டு அட்டைகள் பிரதேச செயலகத்தி னால் தற்போது கிராம சேவையாளர் பகுதி களில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை குடியிருப்பாளர்கள் வைத் திருந்த குடும்ப விபர மற்றும் பங்கீட்டு அட்டைகள் கிராம சேவையாளர்களால் மீள வும் திரும்பப் பெறப்பட்டு 2007/2008 இற் குரிய குடும்ப விபர, பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படுகின்றன. (202-51)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

காரைநகரிலிருந்து உறவினரைச் சந்திக்க வந்த பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து பயமுறுத்தி இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவ கச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம் பெற்றது.

அப்பெண் தனியாக நடந்து சென்ற வேளை யில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரி யாத நபர் ஒருவர் திடீரென பெண்ணின் கழுத் தில் கத்தியை வைத்துப் பயமுறுத்தி சங்கி லியை அபகரித்துக் கொண்டு தப்பியோடி விட்டார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அதிபர் சேவை நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் விவரம்

**அதிபர் சேவை தரம் 2 - II இற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 540 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் மேலும் ஒரு பகுதியினரின் விவரம் வருமாறு:-**

(நேற்றைய தொடர்ச்சி)

அருட்தந்தை கே.ஜே.சிங்கராஜர் (இளவாலை புனித கென்றிஸ்), எஸ்.பாலச்சந்திரன் (மானிப்பாய் இந்து), என்.கேதீஸ்வரன் (சண்டிலிப்பாய் இந்து), கே.ஜெகநாதன் (சுன்னாகம்), எம்.நகுலேஸ்வரன் (மானிப்பாய் மெமோறியல் ), எம்.இளமுருகன் (மானிப்பாய் மெமோறியல்), எஸ்.தனஞ்சயன் (வட்டு. இந்துக் கல்லூரி), என்.மகேந்திரன் (அளவெட்டி அருணாசலம் வித்தி.), எஸ்.சிவமலர் (மூளாய் சைவப்பிரகாசா), கே.சுலம்பமதி (வட்டு மத்தியகல்லூரி).

பி.புஸ்பராணி (வட்டு மத்தியகல்லூரி), என்.விக்னேஸ்வரமூர்த்தி (இளவாலை கன்னியர்மடம்), எஸ். சிறீகரன் (இளவாலை கன்னியர்மடம்),கே.பத்மநாதன் (கட்டுவன்புலம் ம.வி), எஸ்.நாகராஜா (சண்டிலிப்பாய் இந்து), ஏ.பிரேமாநிதி (வலிகாமம் வலய அலுவலகம்), ஜீ.விமலன் (சண்டிலிப்பாய் இந்து), கே.சிவகரன் (மகாஜனாக் கல்லூரி), ஏ.அருள்நேசன்( சில்லாலை றோ.க.), கே.மலர்விழி (பண்டத்தரிப்பு இந்து), இ.கைலைவாசன் (விக்ரோறியாக் கல்லூரி).

எம்.சுப்பிரமணியம் (ஸ்கந்தரோதயக் கல்லூரி), ஏ.கதிர்காமநாதன் (வறுத்தலைவிளான் ஏ.எம்.), கே.லோகநாதன் (வட்டு மத்திய கல்லூரி), வி.சிவகுமரன் (பண்டத்தரிப்பு இந்து), என்.சூரியகுமார் (சங்கானை சிவப்பிரகாசா), என்.ஜெயராணி (சங்கானை சிவப்பிரகாசா), ரி.சிவயோக லிங்கம் (விக்ரோறியாக் கல்லூரி), வி.சண்முகநாதன் (அராலி இந்து), ரி.கிரிதரன் (சங்கானை சிவப்பிரகாசா), பி.ஜெயகௌரி (தோப்பு அருள் நந்தி வித்தி).

எஸ்.ரமேஷ் (மானிப்பாய் மெமோறியல்), எ.ரங்கநாதன் (அளவெட்டி வடக்கு ஏ.எம்.), எம்.ரவீந்திரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஏ.லீலாவதி(அளவெட்டி அருணோதயா), கே.சிவகுமரன்(விக்ரோறியாக் கல்லூரி), ரி.வாசுகி (அளவெட்டி தெற்கு றோ.க.), ரி.குலதாஸ்(சங்கானை சிவப்பிரகாசா), எம்.விக்னராஜா (மானிப்பாய் மகளிர்), எஸ்.திருமகள் (பண்டத்தரிப்பு மகளிர்), எம்.மணிசேகரன் (மகாஜனக் கல்லூரி).

எம்.மகேந்திரன் (அளவெட்டி அருணோதயா), எஸ்.வளர்மதி (வீமன்காமம் ம.வி.), இ.துரைசிங்கம் (மகாஜனாக் கல்லூரி), கே.திருச்செல்வம்(குலமங்கால் றோ.க.) எம்.கோபாலகிருஷ்ணன் (இராமநாதன் கல்லூரி), கே.சாந்திநாதன் (இராமநாதன் கல்லூரி), சி.பஞ்சநாதன் (கீரிமலை நகுலேஸ்வரா வித்தி.), ஈ.கணேஸ்வரன் (மகாஜனாக் கல்லூரி), எஸ்.சிவமூர்த்தி (சுன்னாகம் நகுலேஸ்வரா வித்தி.)

ஸ்ரீகந்தவேல் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), எம்.முரளிதரன் (சங்கானை சைவப்பிரகாச வித்தி.), வி.சந்திரசேகரா (யூனியன் கல்லூரி), பி.சிவநேசன் (மாதகல் சென்.யோசப்), கே.சோமஸ்கந்த மூர்த்தி (மானிப்பாய் மெமோறியல் ), எஸ்.தேவகுமரன் (மகாஜனாக் கல்லூரி), பி.அமிர்தலிங்கம் (அருணோதயாக் கல்லூரி), ஏ.சந்திரகுமாரி (மானிப்பாய் இந்து), பி.சிவலோகநாதன் (பிளாவத்தை ஏ.எம்), ஏ.வி.மகாதேவன் (அராலி வள்ளியம்மை மெமோறியல்), எஸ்.மணிவண்ணன் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க),

வி.அம்பலநாதன் (வடலியடைப்பு சிவப்பிரகாசா), எஸ்.சிவகுமார் (விக்ரோறியாக் கல்லூரி), ஆர்.சேதுநந்தன் (தெல்லிப்பளை சிவப்பிரகாசா), ஆர்.சண்முகேஸ்வரன் (யூனியன் கல்லூரி), எஸ்.சிவலோகநாதன் (குட்டியாபுலம் அ.த.க. பா), ஏ.தயாபரன் (யூனியன் கல்லூரி), ஆர்.எஸ்.மோகனதாஸ் (மானிப்பாய் இந்து), ஏ.சிவஞானம் (நவாலி கிழக்கு), சி.பொன்னையா (வட்டு இந்து), ரி.சந்திரகுமார் (ஆனைக்கோட்டை).

ரி.சுபாகரன் (கொற்றாவத்தை ஏ.எம்), வி.மகேந்திரன் (கொற்றாவத்தை ஏ.எம்), சி.கே.சாய்வைரமணி (கொற்றாவத்தை ஏ.எம்), கே.கிரிதரன் (உடுப்பிட்டி மகளிர் ), ஏ.மனோகரன் (சிதம்பராக் கல் லூரி), ஏ.தேவரட்ணம் (ஹாட்லிக் கல்லூரி), வி.அரவிந்தன் (மெதடிஸ்ற் மகளிர்), எஸ்.சிறிவேணுகோபால சர்மா (மெதடிஸ்ற் மகளிர்), ஆர்.குகன் (குடத்தனை அ.த.க. பா), எம்.கனகலிங்கம் (தும்பளை சிவப்பிரகாசா).

ஜி.உதயரூபன் (சிதம்பராக் கல்லூரி), எஸ்.இராமநாதன் (தொண்டைமானாறு ம.வி), கே.ரவீந்திரன் (தொண்டைமானாறு ம.வி.), ஆர்.சிறிநடராஜா (தொண்டைமானாறு ம.வி), பி.செல்வவிநாயகம் (ஞானசாரியாக் கல்லூரி), சிவயோகராசா (கொற்றாவத்தை ஏ.எம்.), எஸ். கணேசலிங்கம் (ஆழியவளை சி.சி), எஸ்.கணேசதாஸ் (அம்பன் ஏ.எம்), ஜி.கிருஸ்ணகுமார் (நெல்லியடி ம. ம.வி), வி.புவனேந்திரராஜா (கட்டைக் காடு றோ.க.).

எம்.மகேந்திரராஜா (ஹாட்லிக் கல்லூரி), கே.மனோகரன் (குடத்தனை அ.த.க. பா), எஸ்.சிறிகணேஸ் (உடுப்பிட்டி மகளிர்), எஸ். ஜெயதேவா (கம்பர்மலை வித்தி.), கே.நித்தியானந்தன் (நெல்லியடி ம.ம.வி), டி.பி.மன்மதநாயகம் (கரவெட்டி விக்னேஸ்வரா), பி.ஸ்ரீகுமரபரன் (கரணவாய் ம.வி), எஸ்.எஸ்.சண்முகநாதன் (நெல்லியடி ம.ம.வி), எஸ்.இரட்சியலட்சுமி (நெல்லியடி ம.ம.வி), ஆர்.எஸ்.வாகீசன் (கரவெட்டி விக்னேஸ்வரா).

பி.அரவிந்தன் (ஹாட்லிக் கல்லூரி), சி.செல்வச்சந்திரன் (அல்வாய் சிறிலங்கா வித்தி), ரி.கிருபாகரன் (உடுப்பிட்டி மகளிர்), கே.வல்லிபுரநாதன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.கதிரமலை, ஜி.சேதுராஜா (மெதடிஸ்தமகளிர்), ஆர்.சரோஜினிதேவி (கரவெட்டி விக்னேஸ்வரா), எஸ்.குகநேசன் (உடுப்பிட்டி மகளிர்), பி.சக்திவேல் (வி.வி.ரி.ஏ.எம்), கே.சண்முகதாசன் (சிதம்பராக் கல்லூரி), எஸ்.தேவராஜன் (உடுப்பிட்டி அமெரிக்க மிசன்), ஆர்.சிவசங்கர் (உடுப்பிட்டி அமெரிக்கமிஷன்), ஏ.நாகேந்திரன் (கரணவாய் பொன்னம்பலம்), என்.ரவீந்திரன் (வேலாயுதம் ம.வி), வி.உதயமோகன் (மெதடிஸ்ற் மகளிர்), ஈ.நாகேந்திரராஜா (பருத்தித்துறை சித்திவிநாயகர்), ஆர்.நித்தியகுமார் (ஹாட்லிக் கல்லூரி), ரி.நவரட்ணம் (கட்டைவேலி எம்.எம்.), வி.பரமேஸ்வரன் (கரவெட்டி விக்னேஸ்வரா), பி.சிவராஜா (அம்பன் அமெரிக்கன் மிசன்).

கே.சிறீஸ்குமார் (நாகர்கோயில் ம.வி.), கே.குகநாதன் (புற்றாலை ம.வி.), எ.சிவநாதன் (நெல்லியடி ம.ம.வி.), எஸ்.தில்லைநாதன் (வடமராட்சி வலய அலுவலகம்), ஆர்.சிறீதரன் (ஞானசாரியார் கல்லூரி), ஆர்.சிவஞானம் (மெதடிஸ்ற் மகளிர்), ஏ.ஏ.வின்சென்ற் மரியநாயகம் (கலட்டி றோ.க.),ரி.கலைச்செல்வி (ஹாட்லிக் கல்லூரி),கே.தர்மலிங்கம் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்), கே.யோகராஜா (தொண்டைமானாறு ம.வி.).

கே.இராஜதுரை (வதிரி வடக்கு மெ.மி), இ.இராகவன் (கரவெட்டி மாணிக்கவாசகர்), கே.கிருஸ்ணகரன் (கரணவாய் மணியக்காரன் தோட்டம் அ.த.க.பா.), எம்.சண்முகலிங்கம் (அம்பன் அமெரிக்க மிஷன்), எ.செபநேசன் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்), எம்.மணிவர்மன் (துன்னாலை காசிநாதர்), வி.கணேசலிங்கம் (கப்து ஏகாம்பரா), எ.சிவகுமாரன் (ஹாட்லிக் கல்லூரி).

கே.இராஜ்குமார் (வேலாயுதம் ம.வி.), கே.கண்ணன் (நாகர்கோயில் ம.வி.), ஈ.சதாசிவம் (குடத்தனை காரையூர் அமெரிக்க மிஷன்), எஸ்.சிறீராமச்சந்திரன் (மாமுனை அ.த.க.பா.), எம்.சந்திரசேகரம் (வடமராட்சி வலய அலுவலகம்), வி.இந்திரலிங்கம் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா), எஸ்.அமரஜோதி (சிதம்பராக் கல்லூரி), எம்.மெய்யழகன் (உடுப்பிட்டி சிவப்பிரகாசா), எஸ்.செல்வச்சந்திரன் (தேவரையாளி இந்து), கே.பாஸ்கரன் (கம்பர்மலை வித்தி.), ரி.ரவீந்திரன் (கரணவாய் ம.வி.), எஸ்.ஜெயநந்தகுமார் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்), ஆர்.கருணாகரன் (இமையாணன் அ.த.க.பா), எஸ்.பாலராணி (கரவெட்டி கணேசா), யூ.சிவநாதன் (வடமராட்சி வலய அலுவலகம்), எ.யோகேஸ்வரன் (ஆழியவளை சி.சி.), எஸ்.ஜெகநாதன் (வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி), எஸ்.கங்காதரன் (கரவெட்டி விக்னேஸ்வரா), எ.விமலேந்திரன் (அல்வாய் கிழக்கு)

எஸ்.சுபத்திரா (அல்வாய்), ரி.ரட்ணேஸ்வரி(எழுதுமட்டுவாள் வடக்கு), எஸ்.கிருபானந்தன் (நாவற்குழி ம.வி.), வி.ஞானசக்தி (கைதடி முத்துக்குமாரசாமி), என்.ரவிக்குமார் (சாவகச்சேரி இந்து), ஏ.கே.ரவீந்திரன் (நாவற்குழி ம.வி), என்.புகன்சிறிந்திரன் (நாவற்குழி ம.வி.), கே.கந்தசாமி(இயற்றாலை அமெரிக்கன் மிசன்), கே.புஸ்பராஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு), எல்.முகுந்தன் (கொடிகாமம் திருநாவுக்கரசு)

எவ்.தோமஸ் எடிசன் (மிருசுவில் றோ.க.), எஸ்.தயாபரன்(சாவகச்சேரி இந்து), ரி.பாலசுப்பிரமணியம் (கைதடி முத்துக்குமார சுவாமி), எம்.ரகுநாதன் (கைதடி முத்துக்குமாரசுவாமி), எஸ்.மனோகரன் சின்னையா (உசன் இராமநாதன் ம.வி.), கே.கஜேந்திரன் (எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பா.), ரி.செல்வராஜா (கச்சாய் அ.த.க.பா), எஸ்.பவனேந்திரன் (போக்கட்டி றோ.க.), எஸ்.சிவநாயகம் (மீசாலை விக்னேஸ்வரா ம.வி.), எஸ்.பாஸ்கரன் (கைதடி முத்துக்குமாரசுவாமி)

ஆர்.திருஞானசிவம் (கைதடி சேதுகாவலர் வித்தி), எஸ்.உருத்திரமூர்த்தி (உசன் இராமநாதன்), எஸ்.புலேந்திரராஜா (நாவற்குழி அ.த.க.பா. ), எஸ்.பத்மநாதன் (சாவகச்சேரி வலயக் கல்வி அலுவகம்), ஆர்.நாகேந்திரன் (மந்துவில் ஸ்ரீபாரதி), ஐ.தபேஸ்வரன் (விடத்தற்பளை கமலாசினி), எஸ்.செல்வரஞ்சன் (கைதடி ம.ம.வி.), பி.ஜெயரட்ணராஜா (கைதடி விக்னேஸ்வரா), ஜே.பாலச்சந்திரன் (சாவகச்சேரி மகளிர்), எஸ்.கனகரட்ணம் (மண்டைதீவு ம.வி.)

என்.கருணாகரன் (நாவற்குழி ம.வி.), ஐ.தேவராஜன் (எழுதுமட்டுவாழ் கணேசா), வை.கணநாதன் (மண்டைதீவு ம.வி.), கே.வர்ணகுலராஜா (சாவகச்சேரி இந்து),வி.விஜிதா (சாவகச்சேரி மகளிர்), ஓ.விஜயதாசன் (சாவகச்சேரி இந்து), ரி.தவநேசன் (சாவகச்சேரி இந்து), எம்.பிரகலாதன் (வரணி ம.வி.), கே.சிவசுப்பிரமணியம் (சாவகச்சேரி வலயக்கல்வி அலுவலகம்), கே.சிவமூர்த்தி (இருதிடல் அ.த.க.பா.)

ரி.சோதிலிங்கம் (மிருசுவில் அ.த.க.பா.), பி.சந்திரகுலசிங்கம் (வரணி ம.வி.), பி.யோகராஜா (முகாவில் அ.த.க.பா.), கே.சீவரட்ணம் (சாவகச்சேரி இந்து), கே.கோவிந்தராஜா (கைதடி நாவற்குழி அ.த.க.பா.), கே.தேவேஸ்வரன் (சரசாலை சரஸ்வதி), கே.ரவீந்திரா (உஷன் இராமநாதன்), எஸ்.சோமசுந்தரம் (கைதடி சேதுகாவலர் வித்தி.), வி.குமரவேற்பிள்ளை (வரணி ம.வி.), ஓ.விஜயரட்ணம் (சாவகச்சேரி இந்து), ரி.நடேசலிங்கம் (இயக்கச்சி அ.த.க.பா.)

எஸ்.சிவகரன் (விடத்தற்பளை கமலாசினி), கே.எஸ்.மோகனதாஸ் (சாந்திபுரம் ஸ்கந்தவரோதயா வித்தி), கே.உதயசந்தர் (மீசாலை விக்கினேஸ்வரா), கே.உதயசந்தர் (மீசாலை கிழக்கு இந்து), கே.நித்தியானந்தம் (சாவகச்சேரி இந்து), பி.மங்களேஸ்வரன் (சாவகச்சேரி மகளிர்), வி.கனகரட்ணம் (வரணி ம.வி.), எஸ்.தர்மராஜா (மீசாலை வீர சிங்கம்), எஸ்.லக்குமிகரன் (கைதடி குருசாமி), எஸ் நடராஜகுமார் (கைதடி குருசாமி), ஆர். ஸ்ரீபாலகிருஸ்ணன் ரஞ்சிதா (மீசாலை கமலாம்பிகை)

ஏ.மனோரஞ்சிதன் (சந்திரபுர ஸ்கந்தவரோதயா), எஸ்.கிருஸ்ணன் (சந்திரபுர ஸ்கந்தவரோதயா), என்.சுதாமதி (சாவகச்சேரி மகளிர்), ஐ.ஜீவேந்திரா (சாவகச்சேரி மகளிர்), எஸ்.பரமேஸ்வரன் (சந்திரபுர ஸ்கந்தவரோதயா), என்.சாந்தநாயகி (நுணாவில் தெற்கு அ.த.க.பா), எஸ்.சுந்தரமூர்த்தி (வரணி ம.வி.), எஸ்.தயாபரன் (சரசாலை ஸ்ரீகணேசா), வி.வைகுந்தநாதன் (மட்டுவில் மேற்கு சாந்தநாயகி), எஸ்.கோடீஸ்வரன் (வரணி ம.வி.).

வி.கபிரியேல்பிள்ளை (முகமாலை றோ.க.), என் சிறிகரன் (சாவகச்சேரி), என்.கணபதிப்பிள்ளை (சாவகச்சேரி), ஏ.சிவனேசன் (நாரந்தனை கணேசா), ரி.சிவசோதி (நாவாந்துறை றோ.க.), ஜி.சரோஜினி (வேலணை தெற்கு நடராஜா), என்.கே.கணேஸ்வரன் (நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட வித்தி.), என்.நடராஜா (மெலிஞ்சிமுனை றோ.க.), ஜே.ஸ்ரீஸ்கந்தராஜா (நாரந்தனை றோ.க.), எஸ்.சத்தியவரதன் (நெடுந்தீவு சிவப்பிரகாசா).

வி.கார்த்திகேயன் (யாழ்ற்ரன் கல்லூரி), ரி.மதிவதனன் (யாழ்ற்ரன் கல்லூரி), ஏ.சாந்தகுமார் (பாலாவோடை இ.த.பா.), ரி.பாலகணேசன் (புங்குடுதீவு ஸ்ரீகணேசா), பி.ஆரூரன் (தீவக வலய அலுவலகம்), பி.சற்குணராஜா (நாரந்தனை கணேசா), எஸ்.வாசுகி (நாரந்தனை றோ.க.), எஸ்.சிவானந்தன் (சேர்.வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வி), எஸ்.கோபாலகிருஸ்ணன் (நாவாந்துறை றோ.க.), ஜே.ஏ.அனேஸ்தாஷியா (மெலிஞ்சிமுனை றோ.க.)

வி.தவபாலன் (தீவகக் கல்வி அலுவலகம்), வி.கணேஸ்வரன் (புங்குடுதீவு ம.வி.), வி.சாரதாம்பாள் (தீவக கல்வி வலய அலுவலகம்), ரி.தர்மராஜா (தீவக கல்வி வலய அலுவலகம்), எஸ்.கணேஷ்வரன் (புங்குடுதீவு ம.வி.), எஸ்.பத்மராஜா (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார்), வி.திருச்சபேசன் (வேலணை சரஸ்வதி), வி.உதயகுமாரன் (நயினாதீவு ஸ்ரீ கணேசா), ஆர்.சிறிதரன் (காரைநகர் ஊறி அமெரிக்க மிசன்), எஸ்.ரவிச்சந்திரன் (தம்பாட்டி அ.த.க.பா), பி.ஈ.கஸ்ரன்றோய் (கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர்), எஸ்.கணேசமூர்த்தி (டாக்டர் ஏ.தியாகராஜா ம.வி.), சி.தியாகராஜா (கரம்பன் சண்முகநாதன்), கே.தேவராஜ் (கரம்பன் சண்முகநாதன்), கே.சுவேந்திரன் (காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார்), வி.சுவேந்திரன் (டாக்டர் ஏ.தியாகராஜா ம.வி), கே.கதிரேசபிள்ளை (தீவக வலய அலுவலகம்), வி ஓங்காரலிங்கம் (நயினாதீவு).

(முற்றும்)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
சமூகஜோதி கதிரேசு நவரத்தினம்

அவர்கட்கு எமது இதய அஞ்சலி

1981 இல் ஸ்தாபிக்கப்பட்ட சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச ஸ்தாபக முன்னோடிகளில் ஒருவராகவும் ஆரம்பம் முதல் 1997 வரை இச் சமாசத்தின் வினைதிறன் மிக்க பொருளாளராகவும் அதனைத் தொடர்ந்து சமாசத்தின் காப்பாளர் சபை அங்கத்தவராகவும் அயராது தொண்டாற்றிய யாழ்.அரியாலைபதி கதிரேசு நவரத்தினம் அவர்கள் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

*அன்னாரின் மறைவினால் கவலையுற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**சமூகமுன்னேற்றக் கழகத்தின் சமாசமும்**
**புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும்.**

(61319)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தனிப்புலிசிங்க முதலியார் இரத்தினம்

சுழிபுரம், கல்லை வேம்படி இராமலிங்கச் சட்டம்பியாரின் மூத்த மகளும், வைத்திய கலாநிதி தனிப்புலிசிங்க முதலியாரின் மனைவியுமாகிய இரத்தினம் 04-06-2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதன் (ஸ்டேசன் மாஸ்ரர்), தெய்வானைப்பிள்ளை, இராசபட்சம் (நீர்ப்பாசனம்), முருகேசம்பிள்ளை (அதிபர்) மற்றும் கந்தசாமி (பொலிஸ் உத்தியோகத்தர்), திருமதி கந்தசாமி ஆகியோரின் சகோதரியும், உலகநாதன், மகாலிங்கம், திருமதி பாலகிருஷ்ணன் நகுலாம்பாள் ஆகியோரின் தாயாரும், பாலகிருஷ்ணனின் (ஆசிரியர்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பறாளாய் வீதி,*
*சுழிபுரம்* (61314)

தகவல்:
**மக்கள், மருமக்கள்.**

### திருமதி லோகேஸ்வரன் சூரியகலா

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரன் சூரியகலா 03-06-2007 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் லோகேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (**N.P.S.**மணியம்) - மகேஸ்வரி, தம்பதியரின் மருமகளும் மிதுலா, திவாகர் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 09-06-2007 சனிக்கிழமை கனடா மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
T.P.0776141284
0015143422860(கனடா)

தகவல்:
மு.மனோகரநாதன் (மைத்துனர்)
சு.சிவநேசன்
(ஆசிரியர், CTB கோண்டாவில் - அண்ணா)
(61316)

### கதிர்காமத்தம்பி நிரோஜன்

புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய கதிர்காமத்தம்பி நிரோஜன் 03.06.2007 ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும் செல்லத்தம்பி - காந்திமதி தம்பதியரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வநாயகம் - பூரணம் பிள்ளை தம்பதியரின் அன்புப் பூட்டனும், நிருஜாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 07-06-2007 வியாழக்கிழமை அவுஸ்திரேலியா சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

529 A, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு - 06 (61316)

தகவல்:
[illegible] (மைத்துனர்)
நிருஜா (சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் நில, நீர் வளங்களைப் பாதுகாக்க — விழிப்புணர்வும் உகந்த செயற்பாடுகளும் உடனடித் தேவை

**இன்று உலக சூழல் நாளாகும். குடாநாட்டின் சூழல் பிரச்சினைகள் இக்கட்டுரையில் தொட்டுக் காட்டப்படுகின்றன.**

இன்று ஜூன் 5ஆம் திகதி உலக சூழல் தினமாகும். 1972 இல் சுவீடன் ஸ்ரோக்ஹோமில் நடைபெற்ற சூழல் மாநாட்டிக்குப் பின்னர், கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகச் சர்வதேச ரீதியாக சுற்றுச் சூழல் விழிப்புணர்ச்சி மக்களிடையே அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு சூழல் விடயங்கள் சர்வதேச நிகழ்ச்சி நிரல்களில் முன்னர் இல்லாத அளவுக்கு இன்று முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நிறுவன அமைப்புகளின் செயற்பாடுகளில் சூழல் விவகாரம் முன்னிலை வகிக்கின்றது. இவ்வருடம் 'புவி வெப்பமடைதல்' பிரதான விடயமாக சூழலியளாளர்களால் கொள்ளப்படுகின்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக பிறேஸிலில் "றியோ மாநாடு - நிகழ்ச்சி நிரல் 21" புவி வெப்பம் அடைவது தொடர்பாக பேர்லினில் நடைபெற்ற மாநாடு, குயாற்றோ (Koyoto) உடன்பாடு மற்றும் பல்வேறு சர்வதேச, தேசிய, பிராந்திய மாநாடுகள் சூழல் விடயங்களைப் பற்றிப் பெரும் எடுப்பில் ஆராய்ந்துள்ளன.

மேலும் இக்காலப் பகுதியில் சர்வதேச ரீதியாக எடுக்கப்பட்ட பல தீர்மானங்களுக்குப் பெரும் எண்ணிக்கையான நாடுகள் ஒப்புதல் அளித்தது மட்டு



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
(Ph.D., Durham)
(முன்னாள் துணைவேந்தர்)

மன்றி, தத்தம் நாடுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றியும் நடைமுறைப்படுத்தியும் வந்திருக்கின்றன.

புவி வெப்பம் அடைவதாலும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் நீண்ட, குறுகிய காலப் பாதுகாப்புப் பற்றி இப்போது நீண்டகால, குறுகியகால அணுகுமுறைகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புவி வெப்பமடைவதால் கடல் நீர் மட்டம் உயரும் எனவும், கரையோரப் பகுதிகளும், உயரம் குறைந்த சிறு தீவுகளும் கடலுக்குள் மூழ்கலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே தென்துருவம், வடதுருவப் பகுதிகளில் பனிக்கட்டிப் பாறைகள் உருகி, பனிபடர்ந்த பிரதேசத்தின் பரப்பளவுக் குறைந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் துருவப் பிரதேசங்களில் தரை,கடல் வாழ் உயிரினங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன எனவும் அறியக் கிடக்கின்றது. சீன விஞ்ஞானி ஒருவர் "இன்றைய புவி வெப்பமடையும் நிலை தொடருமானால், 2030 ஆம் ஆண்டளவில் இமயமலையின் பனிச்சிகரங்கள் உருகிவிடும் எனவும், இதனால் இந்து, கங்கை, யேஸ்ரிசிக்கியாங் போன்ற ஆறுகள் நீர்வற்றி வரண்ட ஆறுகளாக விளங்கும்" எனக் கூறியுள்ளார்.

### இயற்கையை வெல்ல வழியுண்டா?

புவி வெப்பமடைவதாலும் மற்றும் சூழல் பாதுகாப்பற்ற செயற்பாடுகளாலும் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் பலவற்றால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல நாடுகளில மக்கள் பாதிப்புக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

வரட்சி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, கடல் உள்வரவு, சுனாமி, நிலநடுக்கம், இடிமின்னல், புயல், சூறாவளி போன்ற பல இயற்கை அனர்த்தங்கள் உலக மக்களை அச்சுறுத்தி வருகின்றன. நாம் இவற்றை முழுமையாக வெல்ல முடியாவிட்டாலும், பொருத்தமான சூழல் பாதுகாப்புக் கொள்கைகள், செயற்பாடுகள் மூலம் இவற்றின் தாக்கங்கள் சிலவற்றைத் தவிர்க்கவும் குறைக்கவும் முடியும்.

முன்னர் போன்று பொருளாதார நன்மைகளை மாத்திரம் கணிப்பிடாது, சூழல் பாதுகாப்புக்கு முன்னிடம் கொடுத்தே திட்டங்களை முன்னெடுக்கும் போக்கு அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றது. மக்களும் திட்டங்களை முன்மொழியும்போது சூழல் பாதுகாப்பிற்கு முன்னிடம் அளிக்கும் போக்கைக் காணமுடிகின்றது.

இலங்கையில் மேல் கொத்மலைத் திட்டம், நுரைச்சோலை அனல் மின்சாரத் திட்டம், கட்டுநாயக்கா-கொழும்பு பெருஞ்சாலைத் திட்டம் ஆகியன அரசால் முன்னெடுக்கப்பட்ட போது, அவ்வப் பிரதேச மக்கள் இத்திட்டங்களால் சூழல் பாதிக்கப்படும் எனக் கடும் எதிர்புத் தெரிவித்தனர்.

### சேது சமுத்திரத் திட்டத்தில் சூழல் பாதுகாப்புக்கு வசதி

இந்தியாவில் சேது சமுத்திரத்திட்டத்தில் சூழல் பாதுகாப்பிற்கான செயற்திட்டங்களையும் பெரும் எடுப்பில் உள்வாங்கியே, திட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாடுகள் இன்று பொருளாதரத்துறை, உட்கட்டுமானம், குடியிருப்புகள், எரிபொருள் பாவனை போன்ற பல விடயங்களில் சூழல் விழுமியங்களை உள்வாங்கியே திட்டங்களை மேற்கொள்கின்றன.

உலகரீதியாக சூழல் தொடர்பான எண்ணக்கரு, கட்டமைப்புகள், செயற்பாடுகள் ஓரளவு முன்னேற்றம் கண்ட போதும், இவை உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஒரேமாதிரியாக முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூற முடியாது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் குறிப்பாக ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் தென்னாசியப் பகுதிகளில் சூழல் பாதுகாப்பும், அதன் நிலை பேணலும் கடினமான பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன.

மக்கள் தொகை அதிகரிப்பு, அதிகரித்த நுகர்வு, விவசாய நில விரிவாக்கம், அதீத நீர்ப்பாசனம், காடழிப்பு போன்றவற்றால் வரட்சிப் பிரதேச விரிவாக்கம், நீர்பற்றாக்குறை, புழுதிப்புயல், விவசாய உற்பத்தி குன்றல், விறகுப் பற்றாக்குறை, மேய்ச்சல் நிலம் குறைவடைதல் போன்ற பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இவையே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும்.

### குடாநாடு தனித்துவமான புவியியல் பிரதேசம்

யாழ்ப்பாணக் குடாநாட்டை நோக்கின், இது 1250 ச.கி.மீற்றர் பரப்பையும் 6 இலட்சம் மக்களையும் கொண்டுள்ளதாகும். உயர்வான மக்களடர்த்தியையும் சிக்கலானதும் செறிவானதுமான நிலப் பயன்பாட்டையும் கொண்ட ஒரு தனித்துவமான புவியியல் பிரதேசமாகும்.

குடாநாடு, 25இற்கும் மேற்பட்ட தனித்த நிலத் துண்டுகளைக் கொண்டுள்ளது. இதில் மிகப்பெரிய நிலத்துண்டுகளே தென்மராட்சி - பச்சிலைப்பள்ளி, வலிகாமம், வடமராட்சி ஆகியனவாகும். இத்துண்டுகள் தொண்டைமானாறு, உப்பாறு, ஆனையிறவு, யாழ்ப்பாணக் கடல்நீரேரிகளால் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் குடாநாட்டில் 1000 இற்கு மேற்பட்ட குளங்களும், சிறுகுட்டைகளும் உள்ளன. இப்பிரதேசத்தில் காணப்படும் முக்கிய பருவகால ஆறு வழுக்கையாறாகும்.

சமதரையாகக் காணப்படும் இப்பிரதேசம் சுண்ணாம்புக் கல், அடையல்பாறைகளால் உருவானது. குடாநாட்டில் உயர்வாக குடிசன அடர்த்தி காணப்படுவதற்குக் காரணம் இங்கு காணப்படும் நிலவளம், நீர்வளம், கடல்வளம் என்பனவும் காலநிலையும் ஆகும்.

### தரைக்கீழ் நீரையே அடிப்படையாகக் கொண்ட குடாநாட்டின் வாழ்வியல்

குடாநாட்டில் தரைக்கீழ் நீரைப் பயன்படுத்தியே வருமானம் தரக் கூடிய விவசாயச் செயற்பாடுகள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றன. இதன்வழியாக சிக்கலான நில ஆட்சி முறையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே குடாநாட்டின் வாழ்வியல் என்பது தரைக்கிழ் நீரையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இங்கு நீர்வளம் குறைந்தாலோ, மாசுபட்டாலோ குடாநாட்டின் வாழ்வாதாரம் வீழ்ச்சி காணும். இங்கு ஏற்கனவே தேவைக்கதிகமான உரப்பாவனை, கிருமிநாசினிப் பாவனைகளாலும் தரைக்கீழ் கழிவுநீர் அகற்றும் வடிகாலமைப்பு இன்மையாலும் கிணறுகள், குளங்கள் போன்றவற்றின் மாசுறு நிலைகளாலும் குடாநாட்டின் நீர் நுகர்வுக்கு உகந்ததாக இல்லை என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் பிரகாரம், சாட்டிப் பிரதேச தரைகீழ் நீரைத் தவிர ஏனைய இடங்களில் உள்ள நீர் கூடுதலாக மாசுபட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தின் பொருட்டு மிகையான கிணற்று நீர்ப் பாவனையாலும், கடல் நீரேரிகள் குறிப்பாக உப்பாறு, தொண்டைமானாறு தடுப்புகள் செயலிழந்துள்ளமையாலும் உவர்நீர்த் தடுப்பணைகள் குறிப்

**சூழல் விழுமியங்களை உள்வாங்கியே திட்டங்களை நடைமுறை செய்ய வேண்டும்**

பாக சரவணை, சுருவில், புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் நீண்டகாலமாக அழிவுற்றிருந்தமையாலும் நீரின் உவர்த்தன்மை அதிகரித்துள்ளதாக அறியக் கிடக்கின்றது. சுருவிலில் தடுப்பணை அண்மையில் அமைக்கப்பட்ட பின்னர் குறுகிய காலத்தில் அக்கிராமத்துத் தோட்டக் கிணறுகளில் நீரின் தரம் உயர்ந்திருப்பதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

### தரைமேல் நீர் நிலைகளும் மாசடைகின்றன

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் நீர் உவர்த்தன்மை அடைந்து காணப்படும் அதே வேளை தரைமேல் நீர்நிலைகளும் மாசுற்றுக் காணப்படுகின்றன. இந்த நீர்நிலைகள் மக்களால் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. இம்மாவட்டத்தில் பல உதவித்திட்டங்களின் கீழ் பல குளங்கள் புனரமைக்கப்பட்ட போதும், பொருத்தமான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படாமையால், குளங்களில் தூரகற்றல், கழிவகற்றல் என்பன சிறப்பாக இடம்பெறவில்லை. மேலும் இச்செயற்பாடுகளால் குளங்களின் நீர் கொள்வனவு அதிகரித்திருந்தாலும் நீரின் தூய்மை திருப்தியாக இல்லை. நீர் நிலைகள் தொடர்ந்தும் சேறும் சகதியும் மற்றும் வீசப்பட்ட கழிவுப்பொருள்களும் நிறைந்து காணப்படுகின்றன.

மிக அண்மைக்காலம்வரை இக்குளங்களை மூடி, நில மீட்பு செய்யப்படவேண்டும் என்ற கருத்து அதிகாரிகளிடையேயும் மக்களிடையேயும் நிலவியது. இதனடிப்படையில் யாழ். நகரில் பல குளங்கள் முழுமையாகவோ பகுதியாகவோ மூடப்பட்டு நிலம் மீட்கப்பட்டு குடியிருப்புகளுக்கும் மற்றும் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மிக அண்மையில்தான் இக்குளங்களைப்பேண வேண்டும் என்ற போக்கும் நோக்கும் வலுப்பெற்றுள்ளது. எனினும், வன்னி மற்றும் ராஜரட்டைப் பிரதேச மக்கள் அப்பகுதிக் குளங்களைக் பாதுகாத்து பயன்படுத்தும் முறைக்கும் குடாநாட்டு மக்கள் இங்குள்ள குளங்களைப் பயன்படுத்தும் முறைக்கும் பெரிய வேறுபாடு உண்டு. குடாநாட்டுக் குளங்களைப் பயன்படுத்தும்முறையில் புதிய அணுகுமுறை தேவையாக உள்ளது. குடாநாட்டின் சூழல் பாதுகாப்பிற்கு நீர்நிலைகளைப் பேணவேண்டியது முக்கிய தேவையாக உள்ளது. இது தொடர்பாக சமீப ஆண்டுகளில் சிறு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பி



தூர்ந்து போன குளம்

னும் நல்ல பெறுபேற்றைக் காண்பதற்கு இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

### நிலப் பற்றாக்குறை

குடாநாட்டில் நிலம் குறிப்பாக விவசாய நிலம் ஓர் அரும்பொருளாக உள்ளது. காலங்கடத்தாமல் பொருத்தமான நிலப்பயன்பாட்டைக் கைக்கொள்ளாது விட்டால் நிலைப்பற்றாக்குறை குறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். விவசாயத்திற்கேற்ற நீர் நில வளம் கொண்டிருக்கும் செம்மண் பிரதேசத்தின் ஒரு பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக மாறியுள்ளது. மற்றப் பகுதி அண்மைக் காலத்தில் வாழிடப் பகுதியாக மாறிக்கொண்டு வருகிறது. இராச வீதியால் பயணம் செய்யும் ஒருவர் இலகுவாக இதனை அவதானிக்கலாம். இதனால் குடாநாட்டில் குறிப்பாக தோட்டப் பயிர் செய்யும் நிலத்தை இழந்து வருகிறோம். நீர் வளம், நிலவளம் குறைந்த பகுதிகளில் விவசாயம் சாரா குடியிருப்புகளையும் நகரங்களையும் இட அமைவு செய்வதாலும் நிறுவனங்கள், தொழிற்சாலைகளின் அமைவிலிருந்து செம்மண் பிரதேசம் விடுவிக்கப்படுதாலும் குழாய் வழி நீர் விநியோக விருத்தியாலும் பயிர் உற்பத்தி நிலம் வேறுபயன்பாட்டிற்கு மாறாது பாதுகாக்கப் பட வேண்டும்.

பயிர் உற்பத்தி நிலங்களைப் பேணுதல் மிக முக்கிய சூழல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினையாக உள்ளது. வறுமை ஒழிப்பு இதனுடன் தொடர்புடையது. வளம் குறைந்த நிலப்பகுதிகளில் திட்டமிட்ட நகரக் குடியிருப்புகள் அமைப்பதன் மூலம் இப்பிரச்சனைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும். இல்லையேல் குடாநாடு தோட்டப் பயிர்செய் நிலங்களற்ற பகுதியாக மாறிவிடும்.

குடாநாட்டில் மண், மணல், கல் அகழ்தல், சூழல், பொருளாதாரம் தொடர்பான முக்கிய பிரச்சினைகளாகும். இவற்றின் நிரம்பல் குறைவாக இருப்பது கட்டுமானப்பணிகளைத் தாமதப்படுத்தும் விடயமாக உள்ளது. புனர்வாழ்வு, புனருத்தாரண, அபிவிருத்திப் பணிகளுக்கு பெருமளவு மண், மணல், கல் தேவைப்படுகின்றன. இத்தேவையைக் குடாநாடு பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இருந்ததால் தென்னிலங்கையிலிருந்து கருங்கல்லும், வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து கண்டாவளைப் பெருமணலும் பெறப்பட்டபோதும் உள்ளூரில் பலவிடங்களில் இப்பொருள்கள் ஒழுங்கற்ற முறையில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

(வளரும்)

# இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுத்த வீரவித்து சிவகுமாரன்

**தமிழர் விடுதலை, தமிழ் மாணவர் விடுதலை என்பவற்றுக்காகக் குரல்கொடுத்தவர் பொ.சிவகுமாரன். அவரது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**



ஆசியாவின் முத்தெனும் ஈழத் திருநாட்டில் வாழ்கின்ற பல இன மக்களில் சிங்களவரும் தமிழரும் குறிப்பிடத்தக்கவர். இந்த இரு இனங்களும் மொழியாலும் மதத்தாலும் வேறுபட்டிருப்பதால் அன்றுதொட்டு இன்று வரை இவர்களிடையே ஒரு முறுகல் நிலை இருப்பதை சரித்திர ஆராய்ச்சியாளர்களும் சமகால அரசியலாளரும் உணர்வர்.

இலங்கை சுதந்திரமடைந்த பின் - நாடாளுமன்ற அரசியல் வந்த பின் , அரசில் அங்கம் வகித்த தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் அவ்வப்பொழுது அவர்கள் போட்ட பிச்சைப் பதவிகளுக்காக அவர்களுடன் சேர்ந்து ஒத்தூதியபோதிலும் தங்கள் உரிமைகளை (தமிழர் உரிமைகளை) சிங்கள அரசு படிப்படியாகப் பறித்தெடுத்து, நசுக்கி வந்ததனை உணர்ந்தே வந்தனர். இது விடயமாக உணர்ந்து மனங்கொதித்த பொழுதிலும் அவர்கள் இவர்களைப் பதவி காட்டி, பணமூட்டி தம் பக்கங்காட்டி அணைத்திருந்தமையைக் கடந்த கால வரலாறுகள் காட்டி நிற்கும்.

ஆனாலும், இவர்கள் போடும் எச்சில் மீதிகள் போன்ற இன்னோரன்ன சலுகைகளுக்காக தம் உள்ளத்துணர்வாகிய விடுதலை உணர்வை விட்டுக் கொடுக்காது அவ்வப்பொழுது வெளிக்காட்டி வந்த மறவர் கூட்டத்தையும் வரலாறுகள் பேசுகின்றன.

மூத்த அரசியல் ஞானியான தமிழர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கூட சமஷ்டி சமஷ்டி என்று கேட்டலுற்ற வேளை, தமிழீழம் ஒன்றே தமிழனுக்கு என்றும், தமிழீழத்தைத் தமிழன் பெறுவது ஒரு வில்லங்கமான காரியம் என்றும் தம் பாணியிலேயே தமிழருக்கு அன்று கூறியிருந்ததை தமிழர் மறந்துவிட முடியாது. இவ் வில்லங்கமான காரியம் தான் ஆயுதப் போராட்டம் அகிம்சைவழியாய் தம் உரிமையை அடைந்துவிடலாம் என்று சிங்கள அரசுகளுடன் பல காலம் ஒன்றாய் இருந்து உழைத்த தமிழருக்கு ஆயுதப் போராட்டம் வலிந்து திணிக்கப்பட்டதேயென்று கூறவேண்டும்.

### ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்ட மறவன்

இந்த ஆயுதப் போராட்டத்துக்கு முதல் வித்திட்டவன் உரும்பிராய் [illegible] குமாரன். இவன் உணர்வுகளுக்கு ஆயுதமேந்த வேண்டுமென்ற [illegible] முதல் காரணமாக அமைந்தது, அப்போதைய அரசு தமிழ் மாணவர் உரிமையை நசுக்க எடுத்த தரப்படுத்தல் என்ற கொடிய நடைமுறை யாகும். இத் தரப்படுத்தலால் உயர் கல்வி பெறும் வாய்ப்பை பல்கலைக்கழக கல்வியை பல தமிழ் இளைஞர், யுவதிகள் இழந்து தெருவில் தவித்தனர்.

சிவகுமாரனது உள்ளத்தில் இது பாரிய தொரு தாக்கத்தை ஏற்படுத்தியதால் தன் போன்ற சில வீர இளைஞர்களைச் சேர்த்து தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இப் பேரவையின் ஊடாக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை ஏற் படுத்தி தமிழ் மாணவர்கள் சிங்கள அரசுகளால் நசுக்கப்படுகிறார்கள் என்பதை உலகுக்குக் காட்ட முனைந்தார்.

அவரது வாழ்வில் பின்னணியைப் பார்த்தால் அவர் எவ்வளவு சாந்தமான ஒரு கற்ற வளமான குடும்பத்தில் வந்தவர் என்பதை உணரக்கூடியதாக இருக்கும்.

ஆம், இவர் பிறந்த ஊர் நல்ல வள மண் ணும் கல்விமான்களும் கற்றவர்களும் நிறைந்த கவினுறு உரும்பிராயாகும். இந்த உரும்பிராயின் புகழ் பூத்த ஆசிரியர் பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வனாவார். இவரது ஆரம்பக் கல்வி தம் தந்தையார் கற்பித்த உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் அமைந்தது.

தொடர்ந்து யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரியில் [illegible] உயர்தரப் பரீட்சையால் பாதிக்கப்படும் நிலையினை கண்ணுற்ற வேளை [illegible] இவரது தன்மான உணர்வு தலைகாட்ட முயன்றது.

இவர் கற்ற காலம் யாழ்ப்பாணத் தமிழரிடையே சாதிவெறி தலைதோங்கியிருந்தது. இவ்வேளையிலேயே தந்தை செல்வா சமபந்தி போசனத்தை அறிமுகப்படுத்தினார்.

இதனை அக்கால அரசியலாளர் சிலர் மனப்பூர்வமாக ஏற்று மதித்துச் செயற்படுத்தினர். ஆனால், நாடாளுமன்றக் கதிரைக்காக பாசாங்கு செய்த பலரை சிவகுமாரன் போன்றோர் பரிகசிக்கவும் தவறவில்லை. போலித்தனத்தை சிவகுமாரன் என்றும் பொட்டிட்டுக்காட்டத் தவறியதில்லை.

### 'சயனைட்' தரித்த போர்வீரன்

விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பது போல இவர் தனது வாழ்க்கைக் காலத்தில் பல வடிவங்களில் தனது மக்களின் சார்பான எதிர்ப்புணர்வை அரசிற்குக் காட்ட முனைத்த வேளைகளில் - அரச படைகளால் கைது செய்யப்பட்ட வேளைகளில் தான்பட்ட சித்திரவதைகள் இவனை ஒரு சயனைட் தாங்கிய சரித்திரப் போர் வீரனாக அகில உலகத்திற்கும் காட்டியது. எதிரியின் கைகளில் உயிருடன் பிடிபட்டால் எத்தகு வலிமையுள்ளம் படைத்தவனும் தன் இராணுவ ரகசியங்களை கக்கிவிடுவான் என்ற விழிப்புணர்வு மேலிட, தான் நேசிக்கும் இம் மண்ணிற்கும் மக்களுக்குமாக தன் இன்னுயிரை ஈவதற்கு ஓர் இணையற்ற முறை இது என்று தேர்ந்து தங்கநகை கழுத்தில்போட்டு நங்கையரைக் கவரும் வகையில் இருந்த அந்த வீரமறவன் கறுப்புக் கயிற்றினில் சயனைட் குப்பியைத் தன் கழுத்தில் தாங்கினான்.

தன் வாழ்க்கைக் காலத்தில் தானே தயாரித்த குண்டுகளைக் கொண்டு தாக்குதல்களை நடத்தினார். அரச அடிவருடிகளைத் தாக்கினான். ஆம், அன்றும் 1974 ஜூன் மாதம் 5ஆம் நாள் தன் தோழர்களுடன் சென்ற வேளை கோப்பாயில் பொலீஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டான். அவனுடன் சென்றவர்கள் முழுமையாக ஒத்துளைக்கவில்லை. சிலர் பிடிபட்டனர், சிலர் ஓடினர், கடைசிவரை போராடிய சிவகுமாரன் தன்னிடமிருந்த சயனைட் மூலம் தன்னை மாய்த்து தரணிக்கு ஒரு பாடம் புகட்டி தமிழனுக்கு ஒரு சரித்திரம் காட்டி வீரமரணமடைந்தான். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ADVENTIST அட்வென்டிஸ்ட்

**சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம்**

ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.
1-4 வயது வரை நேரம் 8 -4 மணிவரை
.சாப்பாடு, பாதுகாப்பு, பராமரிப்பு.
இடம்: 34 B, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 34 B, கோயில் வீதி, யாழ்ப்பாணம், (or) 850, ஆஸ்பத்திரி வீதி.
T.P.0776393417
(61306) நிர்வாகி.



**விற்பனைக்கு**

தேக்கம் பலகையிலான கவுண்டர்களும்
கண்ணாடி அலுமாரிகளும் விற்பனைக்குண்டு
தொடர்பு: 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P.222 7542 (61302)



**விற்பனைக்கு**

Sony T.V. கலர் 21" - 01
கணனி மேசை (சிறிது) - 01
மேசை ஃபான் - 01 விற்பனைக்குண்டு.
தொடர்பு: K. நாதன், கச்சாய் வீதி, கொடிகாமம்.
0776393417 (61306)



**யாழ்ப்பாணப் பாடசாலை வான்சேவை**

வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு வான் சேவை நடைபெறுகிறது. இச் சேவையை பெற விரும்பும் ஆசிரியர்கள், மாணவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.
T.P. 0777 168656, 0779364727
S.சங்கர், நெல்லியடி, கரவெட்டி. (61309)



**பதவிவெற்றிடம்**

செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம், சுன்னாகம் கிளை

செலிங்கோ காப்புறுதிக் கம்பனி தங்கள் வாடிக்கையாளர் சேவையை விரிவுபடுத்தும் முகமாக பிரதேச ரீதியாக சுன்னாகம் கிளைக்கு விற்பனை ஆலோசகர்களை நியமிக்கவுள்ளது. 18 வயதிற்கு மேற்பட்ட, G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி தகுதி உள்ளவர்கள் 06-06-2007 புதன்கிழமை மு.ப.9 மணி முதல் 12 மணிவரை சுன்னாகம் கிளையில் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு சமுகம் தரவும்.

முகாமையாளர்,
இல.145, 146, K.K.S.வீதி,
சுன்னாகம்.
T.P. 021 222 8074 (61028)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நடராஜா சேகர்



அன்னையின் மடியில் 02.10.1961 — ஆண்டவன் அடியில் 05.06.1996

*திதி: 04-06-2007*

எத்தனை திங்கள் சென்றாலும்
இத்தரணியில் இருக்கும் வரை
மறவோம்.

*ராசப்பா பவனம்,*
*கரவெட்டி கிழக்கு.* (61311) குடும்பத்தினர்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் க.லம்போதரன்

(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

தோற்றம் 08-11-1931 — மறைவு 21-05-1992

*திதி: 05.06.2007*

இத் தாவர சங்கமத்தில் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம் பெருமான் மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று
வீடுற்றேன்
வீடு பேறு பெற்ற உத்தமர் என்றும் எங்கள் துணையாயிருக்க
விநாயகப் பெருமானையும் வீரபத்திரரையும் பிரார்த்திக்குர்.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (60979)

குடும்பத்தினர்.
*மீசாலை கிழக்கு, மீசாலை.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சீனிக்குட்டி இராசசேகரம்

(இளைப்பாறிய அதிபர்)

*திதி: 05-06-2007*

தோற்றம் 11-08-1931 — மறைவு 17-05-2006

எங்கள் உயர்வுக்கு நல்வழிகாட்டி
எங்களை வாழவைத்த அப்பாவே!
நீங்கள் மறைந்து ஆண்டொன்று
சென்றாலும் ஆறவில்லை எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (61142)

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### இளையதம்பி சின்னத்தம்பி

மலர்வு 12-07-1925 — உதிர்வு 16-05-2006

திதி: அபரபக்ஷ பஞ்சமி (05-06-2007)

கண்ணை இமை காப்பதுபோல் காலமெல்லாம் எமைக்காத்து
பண்போடு பாசம் பல கலைகள் எமக்களித்த தெய்வம்
விண்ணேகி இன்றோடு ஆண்டொன்று ஆனதுவோ!
கண் நனைந்து பணிகின்றோம் காலமெல்லாம் - உன்நினைவில்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர். (சி-52549)

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும்



மண் மகிழ 07 ★ 10 ★ 1922 — கண் நெகிழ 08 ★ 05 ★ 2007

### திருமதி தம்பிஜயா மகேந்திரம்

(12 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

*அன்பைச் சுமந்து நின்ற தாயே!*
*எங்கள் உள்ளம் எல்லாம் கலந்திருக்கும் தெய்வமே!*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவரே!*
*பிறர்க்கு உதவும் மகத்துவத்தை உணர்த்தியவரே!*
*எளிமையின் சிறப்பை உணர்த்தியவரே!*
*ஏணியாய் நின்று எமையெல்லாம் உயர்த்தியவரே!*
*ஒற்றுமை ஒழுக்கம் இவற்றையெல்லாம் கற்றுத்தந்தவரே அம்மா!*
*உன்னைத் தந்து எங்களை ஆளாக்கினாய்!*
*எதைத்தான் நீங்கள் எங்களிடம் பெற்றீர்கள்?*
*"ஆசைப்பட்ட எல்லாவற்றையும் காசிருந்தால் வாங்கலாம்*
*அம்மாவை வாங்க முடியுமா?"*

எங்கள் அன்புத்தாயின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தபால் மற்றும் தந்திமூலம் ஆறுதல் தந்த அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05-06-2007) செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு கண்ணகை அம்மன் புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (07-06-2007) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் அவற்றைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனத்திலும் பங்கெடுத்துக்கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தம்பிஜயா வைத்திலிங்கம் (மகன் குடும்பம்)
உரிமையாளர்:
கண்ணன் லொட்ஜ், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
திருமதி திருச்செல்வம் தர்மாம்பிகை (மகள் குடும்பம் - இலண்டன்)

இல.129/1, ஸ்ரீகிருஷ்ணா,
பலாலி வீதி,
திருநெல்வேலி. (61139)

## மரண அறிவித்தல்கள்



### வேலுப்பிள்ளை பரராசசிங்கம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரராசசிங்கம் 02.06.2007 சனிக்கிழமை தெகிவளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், தடாதகைப்பிராட்டியாரின் அன்புக் கணவரும், அன்னம், காலஞ்சென்ற தங்கேஸ்வரி மற்றும் தங்கமணி, விமலாதேவி, வசந்தாதேவி, சுசிலாதேவி ஆகியோரின் சகோதரனும், கணேசன், செந்தில், அனுஷா, பிரதாபன், திவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமங்களா, பாலசூரியன், துஷ்யந்தி, கிருஷ்ணவேணி, மாலதி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெகிவளையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (05-06-2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக [illegible]கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Malwatta Cross Lane,**
**Dehiwala.**
**T.P. 273 1792** (61298)

தகவல்:
ந.சிவகுமார் (மருமகன்)
கொக்குவில் கிழக்கு



### கதிரேசு நவரத்தினம்

(இளைப்பாறிய பெருந்தெருக்கள் திணைக்கள படவரைஞர்)

அரியாலை, மாம்பழம் சந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு நவரத்தினம் நேற்று (04.06.2007) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு முத்துப்பிள்ளையின் அன்புப் புதல்வரும் திருமதி கமலா என்று அன்பாக அழைக்கப்படும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வீரகத்தி - வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகனும் பிறேமராசா, காலஞ்சென்ற புஷ்பராசா, பிறேமலதா, காலஞ்சென்ற புஷ்பராதா, ஜெயராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலா, கந்தசாமி, சியாமளா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-06-2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*185, கண்டி வீதி,*
*மாம்பழம்சந்தி, அரியாலை.* (61303)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அளவுக்கு மீறிய நம்பிக்கை!

இலங்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய தரப்புகளில் ஒன்றான இலங்கை அரசுப் பக்கத்திலிருந்து அந்த யுத்த நிறுத்தம் குறித்து வெளியிடப்படும் முன்னுக்குப் பின் முரணான கருத்துகள் மக்களைக் குழப்பமடைய வைப்பனவாக இருக்கின்றன.

"போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டிய காலம் கனிந்துவிட்டது. ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்துக்கும் இன்றைய தள - கள - நிலைமைக்கும் இடையில் பெரும் வேறுபாடு உள்ளது. ஆகவே போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதா என்பது குறித்து அடுத்த வாரத்தில் விசேட கலந்துரையாடல்களை அரசு நடத்த உள்ளது" - என்று அரசின் சார்பில் அதன் பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஊடகவியலாளர் மாநாட்டில் கடந்த வாரம் அறிவித்தார்.

ஏறத்தாழ இதே சமயத்தில் 'அல் - ஜெஸீரா' தொலைக்காட்சி சேவைக்குப் பேட்டியளித்த நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "யுத்த நிறுத்த ஒப்பந்தம் செத்துவிட்டது" - என்ற சாரப்படக் கருத்துக் கூறியிருக்கின்றார்.

இதற்கு, சில காலத்துக்கு முன்னர் வெளிநாட்டு செய்தியாளர் ஒருவருக்குப் பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷவும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் முற்றாக செயலிழந்து விட்டாலும் சர்வதேசத்தைச் சமாளிப்பதற்காகப் பெயரளவிலேனும் அதனைப் பேணுபவர்களாகக் காட்டவேண்டியவர்களாக உள்ளோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் அரச ஆங்கில ஊடகத்துக்குப் பேட்டி அளித்துள்ள இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, "யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து பேணப்பட்டு, மதிக்கப்பட்டு, நியாயமாகப் பின்பற்றப்பட வேண்டுமானால் யுத்த நிறுத்தம் தொடர்பாக புலிகளுக்கு அரசு சில நிபந்தனைகளை விதிக்கும்" - என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

- இப்படியெல்லாம் கொழும்பில் கருத்துகள் - அதுவும் அரசின் பாதுகாப்புத்துறை சம்பந்தமான உயர் தரப்புகளிடம் இருந்து - வெளியாகிக் கொண்டிருக்க, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவோ, சிங்கப்பூருக்குப் போய் நின்று கொண்டு இவை அனைத்துக்கும் மாறான வகையில் - வேறு விதமாக - கருத்து வெளியிடுகின்றார்.

"போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகும் எண்ணம் அரசுக்குக் கிடையவே கிடையாது. அப்படி ஒரு திட்டத்தை அரசு பரிசீலிக்கவேயில்லை. போர்நிறுத்த உடன்படிக்கை இன்னமும் நடைமுறையிலேயே உள்ளது." - என்று அங்கு வைத்து அடித்துக் கூறியிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர்.

போர் நிறுத்த ஒப்பந்த விடயத்தில் மாத்திரம் அல்ல - விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தைக் கையாளும் கோட்பாட்டு விடயத்திலும் கூட - இந்த அரசு மட்டுமல்லாமல், இதற்கு முன்பிருந்த பழைய அரசுகளும் கூட - இதே மாதிரியான குழப்பமான, மருட்சியான, இசகு பிசகான போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கின்றன என்பதை இலங்கையின் யுத்தப் போக்கை ஊன்றிக் கவனிப்பவர்கள் எலலோரும் இலகுவாகக் காணமுடியும்.

கடந்த வாரம் 'அல் - ஜெஸீரா'வுக்குப் பேட்டியளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதில் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தை வலியுறுத்தி நிற்கின்றார்.

"இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் காணும் எண்ணம் அரசுக்குக் கிடையவே கிடையாது. ஆனால் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தப்படாமல் பேச்சு மேசைக்கு வரவே மாட்டார்கள். தாம் பலமடையும் போதெல்லாம் புலிகள் போரைப் பற்றியே சிந்திப்பார்கள். பலவீனமடைந்தால் மட்டுமே அமைதி முயற்சிக்கு வருவார்கள். அதனால் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கான இராணுவ நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவையாகின்றன." - என்ற சாரப்பட ஜனாதிபதி மஹிந்தர் விளக்கமளிக்கின்றார்.

விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துவதுடன் ஜனாதிபதி மஹிந்தரின் இராணுவ நோக்கு மட்டுப்படுத்தப்படுமா அல்லது அதற்கு அப்பாலும் செல்லும் தந்திரோபாயத் திட்டம் அவருக்கு உண்டா என்பதெல்லாம் வெளிப்படையாகத் தெரியப்போவதில்லை. ஆனால், புலிகளைப் பலவீனப்படுத்தி, அதன் மூலம், தனது நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமையப் புலிகளை பேச்சு மேசைக்கு மடக்கலாம் என்ற அவரது உத்தி - தந்திரோபாயம் - பலிக்குமா, சாத்தியமாகுமா என்பதை இந்த யுத்தத்தின் போக்கை கடந்த இரண்டரை தசாப்த காலமாக உன்னிப்பாக நோக்கி வருபவர்கள் இலகுவாக எடை போட்டு விடுவார்கள்.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. அதுபோல விடுதலைப் புலிகள் இராணுவ அழுத்தத்துக்கும், தோல்விகளுக்கும், தமது பலவீனத்துக்கும் இடம்கொடுத்து, தங்கள் வழமையான - உறுதியான - நிலைப்பாட்டிலிருந்து மசிந்து, மண்டியிடுபவர்கள் போல ஒரு போதும் செயற்பட்டவர்கள் அல்லர். உலகின் நான்காவது பெரிய இராணுவத்தைக் கொண்டிருக்கும் எமது அயல் வல்லாதிக்க நாட்டினாலேயே இவ்வாறு இராணுவ அழுத்தம் போட்டு மசிய வைக்கும் தந்திரத்தை புலிகளிடம் பலிக்கச் செய்ய முடியவில்லை. ஆனால் 'மந்திரத்தால் மாங்காய் பறிப்பவர் போல' இந்த வேலையைத் தம்மால் ஒப்பேற்ற முடியும் என மனப்பால் குடிக்கிறார் நாட்டின் புதிய தலைவர்.

2002 முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைதி முயற்சிகளில் எந்தப் பின்னணியில் தாங்கள் ஈடுபட்டார்கள் என்பதை புலிகள் இயக்கத்தின் தலைவரே தமது கடந்த மாவீரர் தின உரையில் நினைப்பூட்டியிருந்தார்.

*" அமைதி முயற்சிகளை நாம் பலவீனமான நிலையில் நின்று மேற்கொள்ளவில்லை. வன்னிப் பெருநிலப்பரப்பையும் இயக்கச்சி - ஆனையிறவுக் கூட்டுப்படைத் தளத்தையும் மீட்டெடுத்தோம். சிங்கள இராணுவத்தின் 'அக்கினிக்கீல' முன்னேற்ற நடவடிக்கையை முறியடித்தோம். உலகின் போரியல் வரலாற்றில் மகத்தான சாதனைகளைப் புரிந்து, இராணுவ மேல் நிலையில் நின்று கொண்டே இத்தனையும் மேற்கொண்டோம்.*

*"தென்னிலங்கையிலோ நிலைமை முற்றிலும் வேறாக இருந்தது. தோல்வி மேல் தோல்வியைப் பெற்று, போரிடும் மனோநிலை குலைந்து, இராணுவத்தின் முதுகெலும்பு உடைந்து, நாட்டின் பொருளாதாரம் படுத்துத் தள்ளாடிய நிலையிலேயே சிங்கள தேசம் சமாதானப் பேச்சுக்குச் சம்மதித்தது."* - என்று குறிப்பிட்டிருந்தார் பிரபாகரன்.

இராணுவச் சமநிலையில் பின்னடைவு கண்டு, பலவீனமுற்றுள்ளனர் என்று கருதப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் புலிகளிடமிருந்து சமாதான சமிக்ஞையோ, அமைதி முயற்சிகளுக்கான சாதகமான அசைவோ வெளிப்படுத்தப்படவேயில்லை என்பது முதலாவது விடயம்.

இன்றைய நிலையில், நொந்து, நொடித்து, அமைதிப் பேச்சுக்குப் போவதைத்தவிர வேறு வழியில்லை என்ற அளவுக்குப் புலிகளைப் பலவீனப்படுத்துவது சாத்தியமானதா, யதார்த்தமானதா என்பது இரண்டாவது விடயம்.

'அலை ஓயும் வரை குளிக்கக் காத்திருப்பவன்போல்', 'குளம் வற்றும் எனக் காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்குப் போல' ஏமாற்றமடைய வைக்கும் நம்பிக்கை இது.

புதிது புதிதாக ஆட்சிக்கு வருபவர்களுக்கு இத்தகைய புதிய, புதிய கோட்பாடுகளும், சிந்தனைப் போக்குகளும் கிட்டுவது வியப்பில்லை. ஆனால் அவை குறித்துத் தீர்மானிக்க முன்னர், பழைய அனுபவங்களை - பட்டறிவை - கொஞ்சம் அவர்கள் கிளறிப் பார்த்துக் கொள்வது நல்லது. இல்லையேல் தாமும் பட்டுத் தெளியும் நிலைக்கு அவர்களும் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# கப்பலில் எடுத்துவரப்படும் பொருள்களை விலை நிர்ணயித்த பின்னரே விற்கவேண்டும்

## செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

குடாநாட்டுக்கு கப்பல்கள் மூலம் எடுத்துவரப்படும் சகல பொருள்களையும் அரச அதிபரின் ஆலோசனையுடன் விலை நிர்ணயம் செய்த பின்னரே சந்தைப்படுத்த வேண்டும். விலை நிர்ணயம் செய்யாமல் எந்தப் பொருளையும் சந்தைப்படுத்தமுடியாது.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கப்பல் மூலம் எடுத்துவரப்படும் பொர்ருள்களைச் சந்தைப்படுத்த மேற்கொள்ளவேண்டிய ஒழுங்கு குறித்து ஆராயும் பொருட்டு இக்கூட்டம் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நேற்றுச் செயலகத்தில் நடைபெற்றது.

மேலதிக அரச அதிபர், கால்நடை உற்பத்திகள் சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள், யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள், யாழ். வர்த்தக தொழில்துறை மன்றப் பிரதிநிதிகள், ஈஸ்வரபகவான் நிறுவனம் மற்றும் நியூலங்கா ரேடேர்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

* பொருள்களை இங்கு கொண்டு வருவதற்கு முன்னர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் செய்து கொண்ட ஏற்பாட்டின் பிரகாரம் சகல பொருள்களின் விவரங்களையும் அரச அதிபருக்கு அறிவிக்கவேண்டும்.
* கப்பலில் எடுத்துவரப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்கு முன்னர் யாழ். வர்த்தகத் தொழில்துறை மன்றம் அரச அதிபரின் ஆலோசனையுடன் விற்பனை விலையைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இந்த நடைமுறையைப் பூரணப்படுத்தாமல் பொருள்களைச் சந்தைப்படுத்த இயலாது.
* சகல வியாபார நிலையங்களிலும் இருப்பில் இருக்கும் முக்கியமான பொருள்களின் விலைப்பட்டியல் தெளிவான முறையில் மக்கள் பார்வையிடக் கூடிய இடத்தில் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும்.
* சகல விற்பனைகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட பற்றுச்சீட்டு பாவனையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
* ஜீவனோபாயத் திட்டத்திற்காகக் கொண்டுவரப்படும் பொருள்களுக்கு உதாரணமாக கால்நடைத் தீவனம், கோழித்தீவனம், உரம், கிருமிநாசினி போன்ற பொருள்கள் கிரமமாகக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.
* எக்காரணம் கொண்டும் பொருள்களைப் பதுக்கி வைத்து தற்காலிகத் தட்டுப்பாட்டை உருவாக்கக் கூடாது.
* பொருள்களுக்கு தட்டுப்பாடு என்ற காரணத்திற்காக இருப்பில் இருக்கும் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்யக் கூடாது.
* இந்த நிபந்தனைகளை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். (அ-1)

# கல்வி அதிகாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.மாவட்ட பாடசாலை தொகை மதிப்பு(2007) தொடர்பாக கல்வி வலய உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள யாழ். கல்வி வலய ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் கோட்டக் கல்வி அலுவலர்கள், வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (திட்டமிடல்), கணனி தரவு பதியுநர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு இசுறுபாய கல்வி அமைச்சின் பாடசாலை புள்ளி விவரத் திணைக்களத்தினரால் இக்கலந்துரையாடல் நடத்தப்படுகிறது. (அ-207)

# மிருசுவில் உப தபாலதிபர் ஞாயிறன்று மீசாலையில் வைத்துச் சுட்டுக்கொலை

கொடிகாமம், ஜூன் 5

மிருசுவில் உப தபால் அதிபர் மீசாலை பங்களா வீதியில் இனந் தெரியாதோரால் ஞாயிற்றுக்கிழமை மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவர்களை வழிமறித்த ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்தவரும் தற்போது சாவகச்சேரி கனியார் ஒழுங்கையில் வசிப்பவருமாகிய சுப்பிரமணியம் சாந்தீபன் (வயது30) என்பவரே மரணமானவராவார்.

சாவகச்சேரி பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் இச்சம்பவம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசேதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் பொலீஸாரைப் பணித்தார். (அ)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு வசதி மீளவும் அதிகரிப்பு

## 69 கொமாண்டோக்களை வழங்க அரசு முடிவ்

கொழும்பு,ஜூன் 5

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள மெய்க்காவலர்களின் எண்ணிக்கை 69 ஆக மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் சமீபத்தில் கூடிய பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டது. அவருக்கு, அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதைப் போன்று 12 வீரர்கள் மட்டுமே பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டிருந்தனர்.

இப்போது லண்டனிலுள்ள முன்னாள் ஜனாதிபதி தான் ஜூலை மாதம் முதல் இலங்கையில் குடியிருக்கப் போவதாகவும் அதற்கேற்றவாறு தமக்கான பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.(சி)

'லக்பிம' படப்பிடிப்பாளர் தாக்கப்பட்டமையை கண்டித்து!

# ஊடகவியலாளர்கள் நாளை கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூன்5

'லக்பிம' பத்திரிகையாளர் சஜீவ சிந்தக கடற்படையினரால் தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஐந்து ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து நாளை புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளன.

சஜீவ சிந்தக அலுவலக கடமை நிமித்தம் வெளியே சென்று மீண்டும் அலுவலகம் திரும்பிக்கொண்டிருந்த போது இங்குருகொட சந்தியில் வைத்து கடற்படையினரால் கடந்த வாரம் தாக்கப்பட்டிருந்தார்.

இவர் இப்போது கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஊடகத்துறை தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து நாளைய ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (சி)

# பாடசாலை அதிபர்களுக்கான உபசரணைக் கொடுப்பனவு அதிகரிப்பு

அச்சுவேலி,ஜூன் 5

பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப வழங்கப்பட்டு வந்த உபசரணைக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்குமாறு கல்வி அமைச்சு அமைச்சரவைக்கு சமர்ப்பித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப இது வரை காலமும் வழங்கப்பட்டு வந்த உபசரணைக்கான கொடுப்பனவு அலவன்ஸையே அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தரம் 3 பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 150 ரூபா - 300 ரூபாவாகவும் தரம் 2 பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 225 ரூபா - 450 ரூபாவாகவும் 1சீ, 1 ஏ.பி. பாடசாலைகளின் அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 300 ரூபா - 600 ரூபாவாகவும் தேசியப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 375 ரூபா - 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (அ-11)

## நாளை

வைகாசி - 23 புதன்கிழமை
06.06.2007
திதி : பஞ்சமி காலை : 06.48
நட்சத்திரம் : திருவோணம்
மு.ப. 10.58
சுபநேரம் : 04.22 - 05.52
ராகுகாலம் : 11.52 - 01.22

# ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவி; நேர்முகப்பரீட்சைக்கு 31 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

திருகோணமலையில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கும் ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 31 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் வருமாறு -

[illegible]தர்சினி, எம்.பகீரதன், எம்.நாமகள், எஸ்.சிவகௌரி, எஸ்.துஸ்யந்தி, எஸ்.கிளமென்றீனா, பி.சிறீக்குமார், எஸ்.சரஸ்வதி, கே.பாமினி, எஸ்.அருள்மொழி.

பி.வடிவேற்கரசன், கே.கார்த்தியாயினி, எஸ்.லோஜனா, எஸ்.கனகசுந்தரம், ஆர்.கேதீஸ்வரன், பி.தபோதினி, ஆர்.கமலரஞ்சினி, கே.கேமலதா, எஸ். சுசிவதனி, என்.சொரூபி.

எஸ்.துசித்தா, எஸ்.கஜமாலா, கே.சுலோசனா, எஸ்.சிவச்செல்வன், என்.லிடியா ஜெனி, எஸ்.சுகந்தினி, வி.ஆனந்தஜோதி, எஸ்.கலைவாணி, எம்.அனுசியா, கே.றஜித்தா, கே.அன்பரசி (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையான ஆயுதங்களை இந்தியா தருமானால் பிற நாடுகளின் உதவியை இலங்கை நாடாது!

## பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 5

''இலங்கைக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் யுத்தத் தளபாடங்கள் போன்றவற்றை இந்திய அரசு இலங்கைக்கு முழுமையாக வழங்கினால் பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து இலங்கை ஆயுதங்களை கொள்வனவு செய்யாது.''

இவ்வாறு பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹுஸைன் பைலா நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்குத் தேவையான அத்தனை ஆயுதங்களையும் இந்தியா வழங்கத் தயாராகவிருக்கின்றது. இதுவிடயமாக இந்தியா சென்று அங்குள்ள உயர் அதிகாரியைச் சந்தித்துப் பேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ விடம் இந்திய அதிகாரிகள் இலங்கைக்குத் தேவையான அத்தனை ஆயுதங்களையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்தியா அனைத்து ஆயுதங்களையும் வழங்க இருப்பதன் காரணமாக பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக்கூடாது எனவும் இந்தியா கூறியுள்ளது.

ஆயுதக் கொள்வனவில் இந்தியா இலங்கைக்கு விதித்த நிபந்தனை இதுவென்றும் இது இலங்கையின் இறைமையில் தலையிடும் விடயம் என்றும் சில அரசியல் கட்சி கள் கூறுகின்றன. நாம் அதை ஒரு நிபந் தனையாகப் பார்க்கவில்லை.

வர்த்தகம் என்ற அடிப்படையில் அவ்வாறு கூறுவது சகஜம். எமக்குத் தேவை ஆயுதம். எமக்கு வேண்டிய ஆயுதங்களை இந்தியா வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கும்போது நாம் எதற்கு வேறு நாடுகளில் கொள்வனவு செய்யவேண்டும்?

இந்தியா எமது அயல் நாடு. நீண்ட கால உறவு இருநாடுகளுக்குமிடையில் காணப்படுகின்றது. அத்தோடு இலங்கை யில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதில் இந்தியா ஆர்வம் காட்டி வருகிறது.

பயங்கரவாதத்தையொழித்துக்கட்ட இலங்கை அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்திய அரசு முழு ஆதரவை வழங்கி வருகிறது.

இவ்வாறானவற்றை அடிப்படை யாகக் கொண்டு இந்தியா வாக்குறுதியளித்த தின் படி எமக்குத் தேவையான ஆயுதங்களையும் வழங்கும் என்று நாம் நம்புகிறோம். - என்றார். (சி)

# 685 கண்ணி வெடிகள் கிழக்கில் மீட்பு!

கொழும்பு, ஜூன் 05

மட்டக்களப்பில் சில மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளிடமிருந்து அரசுப் படைகள் கைப்பற்றிய மூன்று கிராமங்களில் நடத்தப்பட்ட தேடுதலில் 685 ஆட்களுக்கு எதிரான கண்ணிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கிறது.

வெருகல், பன்குடாவெளி, பனிச்சங்கேணி ஆகிய கிராமங்களில் ஞாயிறன்று படையினர் நடத்திய தேடுதலின்போதே இந்தக் கண்டிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

685 ஆள்களுக்கு எதிரான கண்ணிவெடிகள், 22 குண்டுகள் மற்றும் தாங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகள் என்பன மறைவிடங்களில் இருந்து கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம் தெரிவித்து அறிக்கை

கொழும்பு, ஜூன் 5

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையில் கடமையாற்றிய இரண்டு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

அது வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

எமது செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து சமூக சேவையில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் நாம் அவர்களின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் கொலையானது சமூக சேவையில் ஈடுபட்டிருக்கும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க ஊழியர்கள் மீதும் உலகில் மிகப் பெரிய மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் செஞ்சிலுவை, செம்பிறை அமைப்பு ஊழியர்கள் மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

**உடனடியாக விரிவான விசாரணை தேவை**

மரணித்த எமது தொண்டர்களுக்கு மரியாதை வழங்குவதற்காக அவர்களது இறுதிக்கிரியை முடியும்வரை - இம்மாதம் ஆறாம் திகதிவரை - மட்டக்களப்பில் எமது செயற்பாடுகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவசர தேவைகளைக் கருத்திற்கொண்டு உயிர்காக்கும் செயற்பாடுகள் மட்டும் இடம்பெறும்.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் இக்கொலைச் சம்பவம் தொடர்பாக உடனடியாகவிரிவானவிசாரணைகளைமேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்என்று இலங்கை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

# வவுனியா பூவரசங்குளத்தில் இருவர் சடலங்களாக மீட்பு!

## 4 நாள்களுக்கு முன் காணாமல் போனவர்கள்

வவுனியா, ஜூன் 05

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்களை நேற்றுக்காலை செட்டிகுளம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நாட்டு வைத்தியரான கிரிஷாந்த் லோபஸ் (வயது - 38), சுப்பையா சிவகுமார்(வயது - 38) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருவரது சடலங்களும் அருகருகே போடப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் வாரிக்குட்டி யூரில் இருந்து பூவரசங்குளம் வைத்தியசாலைக்குச் சென்ற சமயம் காணாமற் போயிருந்தனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் காணாமற் போனமை தொடர்பாக நான்கு தினங்களுக்கு முன்னர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

# பஸ் பள்ளத்தில் பாய்ந்து இருவர் பலி! 64 பேர் காயம்!!

## எம்பிலிபிட்டியவில் நேற்று விபத்து

இரத்தினபுரி, ஜூன் 5

எம்பிலிபிட்டிய பணமுர பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்தனர். மேலும் 64 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஊறுலொக்க பிரதேசத்தில் இருந்து எம்பிலிபிட்டிய நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

காயமடைந்துள்ள 64 பேரில் 30 பேர் பெண்கள் எனவும் 6 பேர் படுகாயங்களுடன் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தோரில் சிலர் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையிலும், படுகாயமடைந்தோர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். (சி)

# படுகொலையில் ஈடுபடுவோர் குறித்து தகவல் தருமாறு படையினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூன்று இளைஞர்களை முகமூடி அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அப்பாவி மக்களை கொலை செய்யும் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு தந்துதவ வேண்டும்.

பலாலி, பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் இப்படி கேட்கப்பட்டுள்ளது.

அப்பாவி மக்களை பயங்கரவாதிகள் படுகொலை செய்வதன் மூலம் யாழ். மக்களின் மனங்களில் அச்ச உணர்வை ஏற்படுத்த முனைகின்றனர் என்பது தெளிவாகின்றது.

இராணுவம் தமிழ் மக்களைப் பாதுகாத்து மக்களுடன் சுமுகமாகப் பழகுவதும் பொது மக்கள் படையினருடன் நெருங்கிப் பழகுவதும் தமக்கு சாதகமற்றதாகி விடும் எனச் சிந்திக்கும் பிரிவினர், மக்கள் மீது தாக்குதல் நடத்தி மக்களை அச்சத்துக்குள்ளாக்க முனைவதாகத்தகவல்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய செயற்பாடுகள் மூலம் படையினரதும் பொது மக்களினதும் சமாதானத்தை உருவாக்கும் விருப்பத்தை சிதறடிக்க முடியாது - என்று உள்ளது. (அ-1)

### தொண்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது உள்நாட்டுத் தொண்டர் அமைப்பான செஞ்சிலுவைப் பணியாளர்களின் கொலைகள், ஏனைய தொண்டர் நிறுவனங்களின் பணிகளில் ஆர்வம் குன்றச் செய்யும் என்று சம்பந்தமுடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆழிப்பேரலையினால் பாதிப்புற்றோரின் குறிப்பிடத்தக்க சாரார் தமது வழமையான வாழ்க்கை நிலைக்குத் திரும்பவில்லை.

அதே போன்று இவ்வருடம் முற்பகுதியில் அரசாங்கப் படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் நிலை மிக மோசமாக உள்ளது.

இந்த இரண்டு சாரருக்குத் தேவையான மனிதாபிமானப் பணிகள் இன்னும் பெரிய அளவில் நிறைவேற்றப்பட உள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் மட்டக்களப்பு செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களின் படுகொலைகள் தொண்டர் நிறுவனங்களின் பணிகளில் பெரும் பாதிப்பையும் தாக்கத்தையும் உண்டாக்கும் என்று அவற்றுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக எகெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை ஸ்ரீதரன் சில்வெஸ்டர் கருத்துக் கூறுகையில் -

பணியாளர்களுக்கு விடுக்கின்ற ஓர் அச்சுறுத்தலாகத்தான் இதனைக் கருதுகிறோம்.

இதனால் மக்களுக்கு சேவை செய்யும் விருப்பமும் ஆர்வமும் கொண்ட மனப்போக்குள்ள ஊழியர்கள் நிறுவனங்களில் பணி செய்வதற்கு முன்வராத நிலையினை இது ஏற்படுத்தும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணியாற்றுகின்ற உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பணிகளுக்கும் பாதுகாப்பு வழங் கப்பட வேண்டியதும் மிக மிக அவசியமாகும்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊழியர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது என்றால், ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய மத சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்களுக்கு என்ன பாதுகாப்பு உத்தரவாதம் இருக்கின்றது என்பதையும் சிந்திக்கவேண்டும். - என்றார்.

மட்டக்களப்புமாவட்ட மனிதநேய கூட்டமைப்புக்களின் இணைப்பாளர் பசில் சில்வெஸ்டர் கருத்துத் தெரிவிக்கையில் -

கொழும்பில் கூட தொண்டர் நிறுவன பணியாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது - என்றார். (அ-சி)

### செஞ்சிலுவைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் உதவி செயலாற்று அதிகாரியான ஜே.சந்திரமோகன் மற்றும் தொண்டர் முகாமைத்துவ அதிகாரியான எஸ்.சண்முகலிங்கம் ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக வைத்து சீ.ஐ.டியினர் எனத் தம்மைக் கூறிக்கொண்ட நபர்களால் வெள்ளைவான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டு, பின்னர் கடந்த சனிக்கிழமை இரத்தினபுரியிலுள்ள - கிரியெல்ல என்னும் இடத்தில் சடலங்களாக மீட்கப்பட்டமை தெரிந்ததே. (சி)

### அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் வருடாந்த செயலமர்வுக்கு ஜனாதிபதி, ஜெனிவாவுக்கு செல்லவிருக்கின்ற நேரம் பார்த்தும் இக்கொலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழமையாகவே ஜனாதிபதிக்கு எதிராகவும், அவரது அரசுக்கு எதிராகவும் மனித உரிமை மீறல் கள் குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் தவறான பிரசாரத்தின் அங்கமாக இது தோற்றமளிக்கின்றது.

அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை காணாமல்போனோரின் உறவினர்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்திக்கொண்டிருந்த வேளையில், இக்கொலைச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இவையனைத்தும் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே அமைகின்றது - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### ஒரே மோட்டார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களைப் பார்வையிட்டு பூர்வாங்க விசாரணைகளை நடத்தினார். சடலங்களோடு காணப்பட்ட அடையாள அட்டைகளில் காணப்பட்ட விவரங்களின் படி மூவரும் நல்லூர் மற்றும் கட்டப்பிராய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது.

சோதிராஜா நிஷாந்தன்(வயது - 27 - கச்சேரி - நல்லூர் வீதி), அவரது சகோதரனான சோதிராஜா சுதர்ஷன் (வயது - 21 - கச்சேரி நல்லூர் வீதி), சந்திரகாந்தன் சந்துரு (வயது - 21 - வேளாந்தோப்பு, கட்டப்பிராய்) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என்பது அவர்களது தேசிய அடையாள அட்டைகள் மூலம் தெரிய வந்திருக்கிறது. (அ-1-68)

### 15 சிப்பாய்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏவு தளம் மீதும் புலிகள் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

சமர் நடைபெற்ற இடங்களில் இருந்து இராணுவத்தினர் 15 பேரின் சடலங்களை தமது போராளிகள் நேற்றுப் பகல் மீட்டுக் கொண்டுவந்து சேர்த்தனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் இடையிடையே படையினருடன் ஏற்பட்ட சிறுசிறு மோதல்கள் காரணமாக சடலங்களை மீட்கும் நடவடிக்கை தாமதமானது என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

தாங்கள் மீட்டெடுத்த 15 சிப்பாய்களின் சடலங்களையும் கிளிநொச்சியில் வைத்துச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளிடம் கையளிப்பதற்கு புலிகள் ஏற்பாடு செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் சடலங்கள் நேற்றுக் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறு நடைபெறவில்லை. அனேகமாக அவை இன்று கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வன்னியில் இடம்பெற்ற இந்தச் சமரில் விடுதலைப் புலிகள் தரப்பிலும் 18 போராளிகள் உயிரிழந்தமை தெரிந்ததே.

இன்று ஆரம்பம்
A/L 2008
ஒற்றைப்பதிவு
ஆசிரியர்
திரு. வின்சன்
(B.B.A. Spl) ஆரம்பம்
05.06.2007
Tue. 4.30
ஐடியல் - மானிப்பாய்
கணக்கீடு

கணக்கீடு - தவா
திங்கள், புதன்,
மு.ப. 6.30
பொருளியல் V.V.K. தான்
வியாழன், வெள்ளி
பி.ப. 4.30
அளவையியல் P. பாலா
வியாழன், வெள்ளி
பி.ப. 3.30
லெனின் கலா அக்கடமி,
புங்கன்குளம்
2009 A/L

இப்பத்திரிகை, நியூ-உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org